பொன்னி

NA -1



'பொன்னி' வெளியீடுகள்

திருவள்ளுவரும் திராவிடக்கொள்கையும் — 0—2—0

திருக்குறள் முனிசாமி

அந்நூலில் திருவள்ளுவர் வகுத்த திராவிடக்கொள்கைகளை வெளிப்படையாக அழகுற எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். இதோ திராவிடர் பண்பாடு என்று வீரமுடன் எடுத்துக்காட்டும் அருமையான புத்தகம்.

தேய்ந்த விரல் — 0—4—0

திருக்குறள் முனிசாமி

காதலியின் உள்ளத்தில் எத்தனை இரகசியங்கள் உள்ளன என்று வியந்து, கண்டறியாதன கண்டேம் என்று, படிக்கும் வாசகர்கள் ஒவ்வொருவரும் பேரின்பம் அடைகின்ற காதல் நூல்.

வடலூரும் ஈரோடும் — 0—4—0

திருக்குறள் முனிசாமி

சமய வாதியான வடலூர் இராமலிங்க அடிகள் சமயத்தை வெறுத்து எவ்வாறு ஈரோட்டுப் பெரியாரின் கொள்கைகளை அப்படி அப்படியே பல ஆண்டுகளுக்கு முன் கூறியிருக்கிறார் என்பதை விளக்கும் ஆராய்ச்சி நூல்

வள்ளுவரும் பெரியாரும் — 0—8—0

திருக்குறள் முனிசாமி

பெரியாரின் அழகிய திருவுருவுடன் வெளிவந்திருக்கும் இந்நூலில், வள்ளுவர் வகுத்த தமிழ் நெறி, பெரியார் வாழ்வில் அமைந்திருப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். வேகமான நடை. சிந்தனையைக் கிளறும் கருத்துக்கள். படித்து முடித்ததும் பெரியார்தான் இன்றைய வள்ளுவர் என்ற எண்ணம் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருக்கும்.

ஈரோட்டுத் தாத்தா — 0—4—0

நாரா. நாச்சியப்பன்

நெஞ்சை அள்ளும் இன்பத் தமிழில் பெரியாரின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கவிதையாக்கித் தந்துள்ளார் தோழர் நாச்சியப்பன். வெறும் வரலாறாய் இல்லாமல் ஆங்காங்கே கற்பனை வளமும் அணிச்சிறப்பும் நூலை அழகு செய்கின்றன. பெரியாரைப் பாடும் முதல் கவிதை நூல் இதுதான்!

கோயில் பெருச்சாளிகள் — 0—6—0

தில்லை வில்லாளன்

கோவிலிலே, காவற்காரன் முதல் காசு வாங்கும் பார்ப்பான் வரை, ஒவ்வொரு பெருச்சாளியும் செய்கின்ற ஆபாச லீலைகளைத் தனக்கென அமைந்த விறுவிறுப்பான தமிழில் அப்பட்டமாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

செந்தமிழ்ப் பதிப்பகம்

தபாற்பெட்டி 39 — புதுக்கோட்டை

பொன்


பொருளடக்க

ஆசிரியர்:-
முருகு சுப்பிரமணியன்

மு. அண்ணாமலை
நாரா நாச்சியப்பன்
நாக முத்தையா
அகிலன்
நா. கி. நாகராசன்
அறிஞர் அப்பாத்துரை
வேத்தரசன்
இளமைப்பித்தன்
"ஒளியழகன்"
சு. வழித்துணைராமன்
ராம. அடைக்கலவன்
பழசுபமணியன்
ச. மு. பிள்ளை

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

மலர் 2 : : திருவள்ளுவர் ஆண்டு 1979 : : விலை அ
இதழ் 6 : : ஆனித்திங்கள் 18-ம் நாள் : : 1—7—



செய்திப்பாட்டு

கருதும் தமிழ்ப் பெருநா டுடையார்
கவர்னர் ஜனரல் ஆனார் என்றார்
பெரிதும் மகிழ்ந்தோம்!

∴ ∴ ∴

மேன்மை தங்கிய ஆச்சா ரியாரே!
இருள்சேர் திராவிடம் பெருஞ்சுடர் காண
எழுந்த கிழவர் எய்திய துன்பமும்,
பெரியார் அவரின் பேறுநற் கொள்கையைப்
பெருந்தமிழ் நாட்டார் தெரிந்து கொண்டதும்,
அதனால் ஆரியர் வாலறு பட்டதும்,
உமக்குத் தெரியும்! உண்மையில் அந்தப்
பண்டித நேரோ, பட்டேல் வகையோ
இந்திய அரசியற் பிடம் ஏறி
இருக்கும் வடநாட் டாட்சி யாளரோ,
இவற்றை யறியா எது வில்லை!

∴ ∴ ∴

உத்தமர் பெரியார் கொள்கையை உயர்த்திப்
பத்தி பத்தியாய் எழுதித் தள்ளிப்
பிரசா ரத்தால் பெருக்கிக் காட்ட
வஞ்சகர் யாரும் முன்வர வில்லை!
இருட்டடிப் புக்குள் இருந்தோ மாயினும்,
அருந்தமிழ் நாட்டுத் தெருமூலை யெலாம்,
திராவிடக் கொள்கைகள் இராவிடம் இல்லையென
ஆக்கினோம்; தேக்குவார் மூக்கெலாம் உடைந்தன!

∴ ∴ ∴

மகிழ்வோம்!

நீவிர் அறிவீர் அறிந்த நீவிர்
ஆவது கவர்னர் ஜனரல் ஆகையால்
இந்திய நாட்டின் எந்தக் கோணமும்
சொந்தப் பொறுப்பின் முன்வந் ததனால்
இந்திய நாட்டை இன்னும் பிரிக்க
இருக்கின் றார்கள் திராவிடர் என்றே
எடுத்தும் தொடுத்தும் இயம்புகின் றீரே!

∴ ∴ ∴

கிடைத்தற் கரிய பதவி கிட்டினும்
பிறந்த நாட்டை மறவாப் பெரியீர்!
வடவர் நாட்டைத் தொழில்நா டாக்கலும்,
வாழும் தென்புலம் சந்தையா வதும்,
இடர்மிக வருவதும் தெரியா திருக்குமோ?

∴ ∴ ∴

உணவென் றாலும், உடையென் றாலும்,
ஒடுவீர் டில்லிக் கோடுவீர் என்றே
இகழ்தல் போல, இருக்கும் நிலையை
எடுத்துச் சொன்னீர்! எல்லாம் புரிந்தது!
ஆமாம் அந்தக் காவடி நிலையைப்
போமா றியற்றப் புரட்சி செய்வோம்!

∴ ∴ ∴

அளவிற் சிறிய அயர்லந் தைப்போல்
அருந்தமிழ் நாடும் தனியர சோச்ச,
இயலும் எனநீர் இயம்பினீ ரன்றோ?
இன்றதை மறந்ததாய் ஏன்நடிக் கின்றீர்?

∴ ∴ ∴

பாகிஸ்தா னெனும் பங்கு நீக்கியே
இந்திய நாட்டை எய்தக் கூடும்
என் றுநீர் அன் று எழுதிக் காட்டினீர்!
நன்றென அதன்வழி நடந்தது வாழிய!
இன் று தமிழர் எழுப்பும் விம்மலும்,
எம்மான் பெரியார் செம்மனத் தொண்டும்
உம்மாற் பயன்மிக உற்றிடு மாயின்
நன்றென மகிழ்வோம் திராவிடர் நாங்களே!

—மு. அண்ணாமலை

தீமை ஒழிந்தது!

புதுக்கோட்டைப் பகுதியில் இன்று முதல் மதுவிலக்கு நடைமுறைக்கு வருகிறது; புதுக்கோட்டைத் தனியரசு சென்னை மாகாணத்தோடு இணைக்கப்பட்டதன் பயனாய் இந்நன்மை கிட்டியிருக்கிறது. ஏழைமக்கள் எவ்வளவு உழைத்தும் அவர்களை உருப்படியாகவிடாமல், வாழ்க்கைத்தரத்தில் ஒருபடிகூட உயர முடியாமல் வைத்திருந்தது இந்தக் குடிப்பழக்கம்தான்; அந்தத்தீமை நேற்றோடு ஒழிந்தது; இன்று ஜூலை முதல்நாள்; புதுக்கோட்டை மதுவிலக்குப் பெருநாளைக் கொண்டாடுகிறது.

ஃ ஃ ஃ

சென்னை அரசினர் திட்டங்களனைத்தும் நம் பாராட்டுக்குரியன அல்ல; சிலவற்றை நாம் வன்மையாகக் கண்டித்தும் இருக்கிறோம். ஆனால் மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஓமாந்தூர் மந்திரி சபையைப் பாராட்டித்தான் தீர வேண்டும். ஆண்டொன்றுக்குப் பதினேழு கோடி ரூபாய் சென்னை மாகாணத்திற்குக் கலால் வருமானமாகக் கிடைத்து வந்தது. வரும் அக்டோபர் முதல் தேதிக்குப் பிறகு இந்தப் பதினேழு கோடி ரூபாயில் ஒரு பைசாக்கூடச் சென்னை அரசினருக்குக் கிடைக்கப் போவதில்லை; உள்ளபடியே கொள்கையை நிறைவேற்றுவதற்காக அவர்கள் பெரும் அளவில் இழக்கவும் தயாராயிருக்கிறார்கள் என்பதையே மதுவிலக்குத் திட்டம் காட்டுகிறது.

புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டில் கலால் வருமானம் 13 லட்சம் ரூபாயாகும்; தனியரசின் மொத்த வரும்படியில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு இத்தொகை. இதனைத் 'தியாகம்' செய்துவிட்டு, நிர்வாகத்தை நடத்த விரும்பவில்லை முன்பு 'தர்பார்' நடத்தியவர்கள்; கலால் வருமானத்திற்குப் பதில் புதிய வரிகளைப் போட்டிருக்கலாம்; மதுவிலக்கினால் வரும் நஷ்டத்தை அவ்வாறுதான் ஈடுகட்டுகிறார்கள் மற்ற அரசாங்கத்தினர். வரிபோட விரும்பவில்லையானால், முக்கியமான தொழில்களைச் சர்க்காரே ஏற்றுக்கொண்டு அதன் மூலம் வரும் லாபத்தைக்கொண்டு அந்த நஷ்டத்தை ஈடுசெய்திருக்கலாம். இப்படியெல்லாம் எண்ணிப்பார்க்கவில்லை அவர்கள்; அவ்வளவுதான்!

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்ததாக அறிவிக்கப்பட்ட புதுக்கோட்டை, அம்மாவட்டத்தில் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் மதுவிலக்கினை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. மூன்று மாதத்திற்கு முன்பே நிகழ்ந்திருக்கவேண்டிய இச்சீர்திருத்தம் இப்பொழுதாவது நிறைவேறிற்றே என மகிழ்கின்றோம்.

∴ ∴ ∴

மதுவிலக்கை அனைவருமே ஏற்றுக்கொள்வார்கள்; குடிப்பழக்கமுள்ள அன்பர்கள்கூட 'மதுவிலக்குக் கூடாது' என்று வெளிப்படையாகச் சொல்லமாட்டார்கள். ஆனால் மதுவிலக்கினால் 'அரசாங்க வருமானம் போகிறதே' என்று இரக்கப்படுபவர்கள் உண்டு. "குடிக்கிறவன் குடித்துவிட்டுப் போகிறேன்; அரசாங்கம் இவ்விஷயத்தில் ஏன் தலையிடவேண்டும்?" என்று சுற்றி வளைத்துக் கேட்பவர்களும் உண்டு.

குடிப்பது ஒருவனுடைய உரிமை என்று கருதிக்கொண்டிருப்பவர்களுக்கு நாம் ஒன்றும் பதில்கூற முடியாது; ஆனால் வருமானம் போகிறதே என்று கண்ணீர் வடிப்பவர்கட்குச் சமாதானம் கூறித்தான் ஆகவேண்டும்.

அரசாங்கம் மதுவிலக்கினால் பெருத்த வருவாயை இழக்க வேண்டியதிருக்கிற தென்பதுமட்டும் என்னவோ உண்மைதான்! ஆனால் வருவாயைத் தொகைக் கணக்கில்மட்டும் பார்க்காமல் "அது வரும் வழி என்ன?" என்பதையும் ஆராயவேண்டும். சாதாரண மனிதனொருவன் பொருளீட்டுவதற்கே சில ஒழுங்கு முறைகளைப் பெரியோர்கள் வகுத்து வைத்திருக்கிறார்கள். கேவலமான வழிகளிலே வரும்படி தேடுவது கேவலம் என்ற மனப்பான்மை இந்த நாட்டிலேயுள்ள பரம ஏழைகளிடங்கூட நன்கு பதிந்துபோயிருக்கிறது. அப்படியிருக்க அரசாங்கம் கீழ்த்தரமான வழிகளில் வரும் வரும்படியைக்கொண்டு நடப்பதைவிட அது குலைந்து பாழாய்ப் போவதே மேல் என்பது நம் கருத்து. தனிப்பட்ட மனிதன் கேவலமான முறைகளால் சம்பாதிப்பது கூடாது என்னும்போது அரசாங்கம் மட்டும் அவ்வழியைப் பின்பற்றுவதில் என்ன நியாயமிருக்க முடியும்?

நாட்டிலே குடிப்பழக்கம் பரவியிருந்ததைப் பயன்படுத்திக் கொண்டு அதன்மூலம் நல்ல வருவாய்க்கு வழி தேடிக்கொண்டு, குடிப்பதைச் சட்டபூர்வமானதாகவும், 'குடிப்பது குற்றமல்ல' என்று சட்டப்படி பாதுகாப்பும் தந்துவந்தனர் அரசாங்கத்தார். குடிப்பது இழிவைத் தருகிறது; குடிக்கின்றவனைச் சமூகம் மதிப்பதில்லை; குடிப்பது 'பஞ்சமா பாதகங்களில்' ஒன்றாகக் கருதப்படுகிறது; குடிப்பவனைக் குற்றவாளி என்று சமூகம் கருதுகிறது; மக்கள் செய்கின்ற அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும் தாய்க்குக்கூட அவர்கள் குடிப்பது துன்பந் தருவதாகும் என்று திருக்குறள் கூறுகிறது; குடிப்பவனுடைய குடும்பம் நாளுக்குநாள் வாழ்விழந்து போகிறதேயொழிய வளமான வாழ்க்

கையைப்பெறுவதில்லை; கிடைக்கின்ற ஊதியத்தைவாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் முறையில் செலவிடக் குடி, குடிகாரனை அனுமதிப்பதில்லை; பசியின்றி அவனும் அவன் குடும்பமும் வாட, அவன் கள்ளுக்கடையை நோக்கி ஓடத்தான் குடி, பயன்பட்டது; குடிப்பழக்கம்தான் கொலை முதலிய குற்றங்களுக்கெல்லாம் ஊற்றாய் இருந்து வந்தது. இத்தகைய குடிப் பழக்கத்தைத்தான் 'வருமானம் வருகிறது' என்பதற்காக அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்; குத்தகைத்தொகை ஏறும்போதெல்லாம்மகிழ்ந்தார்கள்; சீர்குலைந்துபோகும்ஏழைக் குடும்பங்களின் தொகையும் கூடுமே என்பதை மறந்தார்கள்.

குடிப்பது கேவலம்; நீதி நூல் கூறுகிறது; ஆனால் அரசாங்கமோ மக்கள் குடிப்பதைப் பயன்படுத்திக்கொண்டு வரி பெற்றுவந்தது; இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க முன் வந்த சென்னை அரசினரை மிகமிகப் பாராட்டுகிறோம்.

ஃ ஃ ஃ

மதுவிலக்குத் திட்டம், சட்டம் நிறைவேறிவிட்டால் மட்டும் அமுலுக்கு வந்துவிடாது. மதுவிலக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதியிலுள்ள மக்கள் அரசாங்கத்தின் இத்திட்டத்தைப் பொறுப்புணர்ச்சியோடு நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும்; கள்ளத்தனம் செய்பவர்களைக் கையும் களவுமாய்ப் பிடித்து அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டும். அதிகாரிகளும் மிகக் கடுமைமையான முறையில் இவிரக்கமின்றிக் குற்றவாளிகளைக் கூண்டிற்குக் கொண்டுவருவதென்று முனையவேண்டும்; அப்பொழுதுதான் அரசாங்கம் மதுவிலக்குக் கொண்டுவந்ததன் பயனை மக்கள் எய்தமுடியும்; பெருத்த வருமானத்தைத் 'தியாகம்' செய்ததற்கும் ஆறுதல் இருக்கும்.

மதுவிலக்கு நடைமுறைக்கு வரும்போது மற்றொரு நெருக்கடியும் நாட்டில் உண்டாகிறது. அதுதான் மரமேறிகள் பிழைப்புக்கு வழி செய்வது. அவர்கள் வேறொன்றும் அறியார்கள்; மதுவிலக்கினால் அவர்களனைவரும் வேலையிழக்க நேருகிறது. அரசாங்கம் அவர்கட்குக் கூட்டுறவு முறையில் குடிசைத்தொழில்கள் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். பனைவெல்ல உற்பத்தியில் அவர்களை இடுபடுத்தலாம் என்று ஆலோசனை கூறப்படுகிறது. தேங்காய் ஓட்டிலிருந்து பொத்தான் முதலிய சாமான்களெல்லாம் செய்யப்படுகிறதாம்; கூடை முடைதலும் அவர்கட்கு ஏற்ற தொழிலே! எப்படியோ அவர்களை நட்டாற்றில் விடாது, பிழைப்புக்கு வழி காண்பிப்பது அரசாங்கத்தார் கடமை என்பதைக் கூறுவதோடு, புதுக்கோட்டையில் மதுவிலக்கு வந்தது; குடிப்பழக்கம் என்ற தீமை ஒழிந்தது என்பதைக் கேட்டுப் புதுக்கோட்டை மக்கள் அடையும் அளவற்ற களிப்பில் நாமும் பங்கு கொள்கிறோம்.

தெரியவில்லை

நாக. முத்தையா



விடுத்தபெருங் கணைபோல விரைந்து வந்து
விரும்பிடுந்தீஞ் சுவையமுதை அள்ளி அள்ளி
எடுத்துமகிழ் வெய்துகின்ற காளை இன்னும்
எத்தனையோ மணிநேரம் ஆனபின்னும்
அடுத்தென்னைக் களிப்பாக்க நினைத்திடாமல்
ஆக்குகின்ற பெரும்பொருள்தான் ஏதுமுண்டோ?
கெடுத்தென்னை வருத்திடத்தான் வேண்டுமென்னும்
கெடுநினைப்புக் கொண்டாரோ தெரியவில்லை!

உருட்டிவிட்ட பந்தினைப்போல் ஓடிவந்தே
உழைத்தலுத்த உடலுக்கே இன்பம் சேர்க்க
இரட்டித்த வேகமுடன் அடிபெயர்த்தே
இல்தேடிப் பறந்துவரும் அத்தான் இன்னும்
இருட்டிவிட்ட போதினையும் நினைத்திடாமல்
இயற்றுகின்ற பெருந்தொழில்தான் ஏதுமுண்டோ?
மருட்டிஎனை மயக்கிடத்தான் வேண்டும் என்னும்
மனவெறுப்புக் கொண்டாரோ? தெரியவில்லை!

பள்ளிவிடுத் தோடுகின்ற பையனைப்போல்
பணிபுரியும் மனைவிட்டு வீடுதேடித்
துள்ளியெழும் உள்ளமொடு தீஞ்சுவையைத்
துய்த்துமகிழ் வெய்துகின்ற அத்தான் இன்னும்
நள்ளிரவு சூழ்ந்ததையும் நினைத்திடாமல்
நாட்டுகின்ற பேரியக்கம் ஏதுமுண்டோ?
கிள்ளியெனைக் கசக்கிடத்தான் வேண்டுமென்னும்
கீழ்மையுளங் கொண்டாரோ தெரியவில்லை!



பாய்வதற்குக் காத்திருக்கும் புருவைப் போலும்
பார்வைகண்டு காமமெனும் நோயில் வீழ்ந்தேன்!
தூயஉளத் தாளென்றன் துடிப்பு நீக்கத்
துணிந்திடுவா ளோஅன்றிக் காத்தி ருந்து
மாயவிடு வாளோஎன் றெண்ணி யெண்ணி
மனக்கவலை கொண்டிருக்கும் போதில் என்மேல்
பாய்ந்துவரும் மலர்க்கண்கள் கண்டேன்! அந்தப்
பாவை இனி எனக்கென்று தெரிந்துகொண்டேன்!

தனிவழியில் ஒருநாள்என் எதிரில் வந்தாள்
தாங்காத உளத்தோடு முகத்தில் இன்பம்
தனைத்தேக்கிப் பார்த்தேன்என் உள்ளரங்கம்
தனிலிருக்கும் உயிர்போன்றாள் தலைகுனிந்தாள்
எனதிருகண் வேறொன்றைப் பார்த்தல் போல
எடுக்கும்நொடி எனைநோக்கிப் புன்னகையைக்
கனிவாயில் தேக்கிடுதல் கண்டேன்! அந்தக்
கன்னியினி எனக்கென்று தெரிந்துகொண்டேன்!

திருநாளில் வருமக்கள் கூட்டந் தன்னில்
தேன்மொழிவாய் மலர்க்கண்ணாள் இடையிருந்தாள்
ஒருபார்வை என்னுளத்திற் குறுதி சொல்ல
உடனனுப்பி வைப்பாளென் றெண்ணி நின்றேன்.
ஒருபோதும் எனைப்பார்த்த தில்லாள் போல
உடன்பார்த்தாள்! பிறரறியா வண்ணம் என்னிற்
பொருந்திவிட்ட இருகண்கள் கண்டேன்! அந்தப்
பூவையினி எனக்கென்று தெரிந்து கொண்டேன்!

இந்திவந்தது, இந்தி!

இந்தி தமிழ்நாட்டில் மட்டும் விருப்ப பாடம் என்று வேடிக்கை காட்டினர் கல்வி அமைச்சர்! "தமிழ் வாழ்வதா, தமிழ் நாட்டில்?" என்றெண்ணிய ஏடுகளும், வடநாடு நோக்கித் தண்டனிடும் 'பெரிய மனிதர்'கள் சிலரும் கல்வியமைச்சரைக் கடிந்து கொண்டனர்; "நாங்களிருக்கப் பயமேன்?" என்று தூபம் போட்டனர். கல்வியமைச்சரின் உறுதி சிறிது சிறிதாகக் கரைந்தது. "விருப்பப்பாடம் தான்; ஆனால் உத்தியோகத்திற்கு ஹிந்துஸ்தானி அறிவும் தேவையென விதியமைக்கப்படப் போகிறது" என்றார் பத்திரிகை நிருபர் கூட்டத்தில், கல்வியமைச்சர். முதலமைச்சரோ, "இந்தி கட்டாயமில்லையென்று யாரும் குறை கூறவில்லையே! கட்டாயமாய் இந்தியைப் பாடம் வையுங்கள் என்று யாரும் கோரவில்லையே!" என்றுவிருப்பப் பாடத்திற்குச் சார்பாகப் பேசியிருக்கிறார் கோவையில். முதலமைச்சரின் பேச்சு வெளிவந்ததுதான் தாமதம், ஆரியஏடுகள் ஒரே குரலில் 'ஹிந்தியைக் கட்டாயமாக்குக' என்று அழுதுதீர்த்தன. பார்த்தார் கல்வியமைச்சர். இதுதான் சந்தர்ப்பமென்று, சென்னைத் தமிழாசிரியர் மாநாட்டில் "தமிழ் நாட்டிலும் இந்தி கட்டாயம்தான்" என்று அறிவித்துவிட்டார்!

மானமுள்ள தமிழினத்தவர்க்குக் கல்வியமைச்சரின் இந்தக் 'கபட நாடகம்' புரியாமலிருக்க முடியாது; புரிந்தும் 'நடப்பது நடக்கட்டும்' என்று தமிழ்ப் புலவர்களும், தமிழ் மாணவர்களும் தமிழ்த் தலைவர்களும், தமிழ் அறிஞர்களும், தமிழ்ப்பெரியோர்களும் வாளாவிருப்பரேல் பண்டு புகழ் பரப்பியிருந்த தமிழர் பரம்பரை மங்கி மடிவதைத் தவிர வேறு போக்கில்லை!

தமிழுக்கு நேர்ந்துள்ள கெடுதியினை உணர வேண்டும் தமிழகத்தார் அனைவரும்; சாதி, சமயக், கட்சி வேறுபாடுகள் இந்தியை எதிர்ப்பதில் தவிடு பொடியாக வேண்டும். "தமிழுக்கு ஊறு" எனில் தமிழர்பொறார் என்பதைக் கல்வியமைச்சர் உணர்ந்தாக வேண்டும்; விருப்பப் பாடத்தைக் கட்டாயம் என்று அறிவித்த அவர் 'தமிழ் நாட்டில் இந்தியே வேண்டாம்' என்று அறிவித்தாக வேண்டும். அந்த நிலையை விரைவில் உண்டாக்கத் தமிழ்ப் பெண்களே, இளைஞர்களே, புல

வர்களே, அறிஞர்களே முன் வாருங்கள்! இந்தியை எதிர்க்க ஆங்காங்கே பட்டாளம் கூட்டுங்கள்!

பசுமலை நாவலர் தன்னுறுதிமொழியைத்தமிழர்க்குத் தந்துவிட்டார்; கல்வியமைச்சர்க்கு அவர் தீட்டியுள்ள கருத்துமிக்க கடிதம் பின்வருகிறது; 'நாவலர் கருத்தே தமிழ் நாட்டவர் கருத்து' என்பதைக் கல்வியமைச்சர் உணருமாறு செய்யப்'பொன்னி' அறிஞர்கள், புலவர்கள், தாய்மார்கள், மாணவர்கள், தமிழ்ப் பெரியோர்களின் கருத்துரைகளைத் தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும் வெளியிட எண்ணியிருக்கிறது. ஒரு 'கார்டு'க்குள் அடங்குமாறு அனைவருடைய கருத்துரைகளையும் வரவேற்கிறோம்.

கல்வியமைச்சருக்கு நாவலர் பாரதியார் கடிதம்

இந்தியைத் திரும்பவும் கொண்டு வருவதை நான் ஆமோதிக்கிறேனென்று பலர் என்னைக் கேட்டு வருகின்றனர். காரணம், இதுசம்பந்தமாக நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தின் குறிப்புகள் பத்திரிகைகளில் வெளிவந்தமையே. குறிப்புகள் வெளி வந்துளவே தவிர, எனது கடிதம் தங்களுக்குக் கிடைத்தமைக்கு அறிகுறியாகக் கூடப் பதிலொன்றையும் காணோம். இப்படி எனது கடிதத்தின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதால் மக்களிடையே தவறான எண்ணம் வளர்ந்து விடக்கூடுமோவென அஞ்சுகிறேன். அதாவது, ஹிந்தி பற்றிய தங்களது புதிய கொள்கையினையும் போக்கையும் நான் ஆதரிப்பதாக மக்கள் கருதிவிடும்படி நேரிடும். முதலில் ஹிந்தி தமிழர்களுக்கு இஷ்டபாடமெனக் கூறப்பட்டது. ஆனால் இப்போதோ கட்டாயமென வற்புறுத்தப் படுகிறது.

இது நான் கொண்டிருக்கும் கருத்துக்கும் கொள்கைக்கும் நேர் முரணானது என்பதையும், எனது கடிதம் கூறியதெதுவோ, அதற்கு மாறானதென்பதையும் தாங்களே அறிவீர்கள்.

எனது கடிதத்தில் கண்டவற்றை அங்குமிங்குமாக இரண்டொன்று எடுத்துக் காட்டுவதைக் காட்டிலும் முழுக்கடிதத்தையும் வெளியிட்டு விடுதல் சிறந்ததொன்றாகும்.

மாகாணத்தில் இதர மூன்று மண்டலங்களில் ஹிந்தியைக் கட்டாயமாக்கித் தமிழ்நாட்டில் மட்டும் விருப்ப பாடமாக்கிய தங்களது அறிவையும் துணிவையும் பாராட்டுமுகத்தானே 1948 ஜூன் 6-ல் நான் தங்களுக்குக் கடிதம் வரைந்தேன். தங்களது சிறந்த தலைவர் தமிழ்நாட்டில்மட்டிலும் ஹிந்தியைக் கட்டாயமாக்கியதும், தாங்கள் தமிழ்நாட்டில் மட்டிலும் அதனை விருப்ப பாடமாக்கியதும் கண்டு உங்கள் கொள்கைக்கும் அவரது கொள்கைக்கும் இருந்த வேற்றுமை நயத்தையுணர்ந்தே நான் தங்களுக்குக் கடிதமெழுத முற்படலானேன்.

தமிழ் மாட்டும் விடுதலை மாட்டும் நான் கொண்டிருந்த ஆர்வத்தின் விளைவாகயதேச்சாதிகாரி யொருவரின் கொடுங்கோன்மையை

அட்டைப் படம்

பொற்கொடி படர்ந்தாள் தேனைப்
பொழிந்திடு பூக்களோடு!
வற்றுத வெள்ளக் காட்டின்
மணற்கரை ஓரம் வந்தாள்!

பாரதிதாசனார் குடும்பவிளக்கு

எதிர்த்து இயக்கமொன்றைத் துவக்கினேன். அது தமிழரிடையே பெருத்த ஆர்வத்தை யெழுப்பியது. இயக்கம் இறுதியில் வெற்றியும் பெற்றது.

ஹிந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதைத்தான் நான் எதிர்க்கிறேன் என்பதையும் புதிய இந்திய யூனியனில் விருப்பப் பொதுமொழியாக அது பரப்பப்படுவதை நான் ஆட்சேபிக்கவில்லையென்பதையும் தாங்கள் உணருவீர்கள். ஹிந்தி விருப்பப் பாடமாகவே இருக்குமெனக் கூறப்பட்டதாலும், பின்னால் நடக்கப் போவதென்னவென்பதற்கு முதலில் குறிப்பேதும் காணப்படவில்லையாதலாலும் உங்களது கொள்கையை நான் பாராட்டலானேன்.

காங்கிரஸ் மந்திரி சபையின் கொடுங்கோன்மை கல்விக் கொள்கைகளிலும் தாண்டவமாட ஆரம்பித்து விட்டது. இளைஞர்கள்மீது மூன்று மொழிகள் கட்டாயமாகத் திணிக்கப்படுவதும் அதுவும் இந்தியாவிலேயே, சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களில் மட்டும் திணிக்கப்படுவது தமிழர்களால் முழு மூச்சுடன் எதிர்க்கப்பெற வேண்டியதொன்றாகும்.

தமிழர்களிடையே இன்னும் நாட்டுப் பற்றென்னும் தழல் கொழுந்து விட்டெரியுமானால் அவர்கள் தீவிரமாக எதிர்த்தே நிற்பர். இவ்விடத்திய காங்கிரஸ் மந்திரிகள் அபரிமித புத்திசாலிகளோ நாட்டுப் பற்றாளர்களோ அல்ல, வென்பதை மக்கள் உணர்ந்திட வேண்டும்.

இறுமாப்புக் கொண்ட வட இந்திய ஆணவ மன்னர்கள்மீதெல்லாம் வெற்றி கண்ட பரம்பரையில் உதித்த தமிழர்கள் இதனை எதிர்த்து நின்று போராடியே தீருவரென நான் நம்புகிறேன்.

இல்லையேல் தமிழர்கள் தாழ்வுறுவதோடு, தங்கள் உரிமை நாட்டிலேயே வட இந்தியத் தலைவர்கட்கு அடிமைகளாகவும், கூலிகளாகவும் இருக்கவே நேரிடும்,

நான் வெறும் இலக்கியத்துறை மாணவனே; எனக்கு அரசியல் விருப்பங்களெதுவும் கிடையாது.

தாய் மொழி அல்லது மண்டல மொழியல்லாத வேறொரு மொழியினை இளைஞர்கள் மீது கட்டாயமாகத் திணிப்பதை நான் அழுத்தந்திருத்தமாகக் கண்டிக்கிறேன், அருமைத் தமிழ் மொழியின் மங்காப் புகழ் மாட்டு எனக்கு என்றென்றும் நம்பிக்கையுண்டென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசி ஆசை

சிறு கதை: அகிலன்

சுந்தனூர் கிராமத்திலிருந்த போர்டு பாடசாலையின் தலைமை ஆசிரியர் மாற்றப்பட்டுப் புதிதாய் நாராயணன் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த மாற்றல் விஷயத்தில் பரம சந்தோஷம் அடைந்தவர் சங்கரசுப்பு. சுப்பு அங்கே துணை ஆசிரியர். அவருக்கும் மாற்றலாகிப் போனவருக்கும் பிடிக்காது. இப்போது வரப்போகிற நாராயணனே வருமுன்பே சுப்புவின் உதவியை நாடியிருந்தார். அல்லாமலும் அவரைப் பற்றித் தாம் ஏற்கனவே கேள்விப்பட்டிருப்பதையும் எழுதி, அவர் குணத்தை வெகுவாகப் பாராட்டியிருந்தார். உண்மையில் சுப்பு அதற்கு உரியவர்தான்.

"என் மனைவிக்குப் பிரசவ காலம். நான் தனியாக வந்து சில மாதங்கள் இருக்கவேண்டும். தயவுசெய்து எங்காவது சாப்பாட்டிற்கு வசதி செய்தால் நலம். எனக்கு வேறு ஆளும் கிடையாது, சமையலுக்குப் பையன் கிடைத்தால் ரொம்பவும் நல்லது" என்று எழுதியிருந்தார் நாராயணன்.

சுப்பு அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. "வருகிறவர் ரொம்ப இளசுபோலிருக்கு. இந்தப் பட்டிக்காட்டில் பையனாவது, சாப்பாடாவது! நம்ம வீட்டில் சமைக்கிறதைப் பையனிடம் கொடுத்தனுப்பினால் சாப்பிடுகிறார்" என்று தீர்மானம் செய்து, அப்படியே ஏற்பாடும் செய்து விட்டார்.

தலைமை ஆசிரியர் நாராயணன் சுப்பு நினைத்ததுபோல் மிகவும் இளைஞர். முப்பதுவயது கூட இருக்காது. வேறு வழியில்லாமல் சுப்புவின் உதவியை நன்றியோடு ஏற்றுக் கொண்டார்.

சுப்புவுக்கு ஐம்பதுக்குமேல் இருக்கும். மனைவி இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அவருடைய தமக்கை, பெண் ஜயா, பையன் பசுபதி,-இவர்கள் தாம் குடும்பத்து நபர்கள். மூத்த பெண்ணை அடுத்தவூரில் திருமணம் செய்து கொடுத்திருந்தார். ஜயா எப்போதும் இங்குதான் அவருடன் இருக்கிறாள். அவருடைய தமக்கை அதிகமாக எழுந்து வேலை வெட்டி செய்ய முடியாத ஒரு கிழம். பையன் பசுபதி அவர் பள்ளிக்கூடத்திலேயே படித்து வந்தான். தலைமை உபாத்தியாயர் நாராயணனுடைய வகுப்பு அவன்.

2

கிராமத்திலே புதிதாக வந்த நாராயணனுக்கு அதிகமாகப் பொழுதைப் போக்குவதற்கு வழி இல்லை. ஒருநாள்

மாலை கையில் ஒரு நாவலை எடுத்துக் கொண்டு ஊருக்கு வெளியே புறப்பட்டார். வாய்க்காலைத் தாண்டி இருக்கும் பொட்டலில் உட்கார்ந்து படிக்கலாம் என்ற எண்ணம்.

போகும் பாதையில் ஒருபுறம் வரிசையாக மருதாணிப் புதர். அது குப்பென்று பூத்து இனிமையான மணம் வீசிக்கொண்டிருந்தது. மறுபக்கம்கற்ருழை. இரண்டு புதர்களுக்கும் மத்தியில் இருந்த ஒற்றையடிப் பாதையில் ஆசிரியர் போய்க்கொண்டிருந்தார். சற்று நேரத்தில் எதிரேயிருந்து கிராமத்துப் பெண்கள் கூட்டம் வாய்க்காலில் நீர் சுமந்து திரும்பிக் கொண்டிருந்தது. கலகலப்பாகப் பேசிக்கொண்டும் சிரிப்பைச் சிதறிக்கொண்டும், வழியெல்லாம் வம்பளந்து சென்ருர்கள் அவர்கள். ஒதுங்கி நின்று அவர்களுக்கு நாராயணன் வழி விட்டார். மற்ற பெண்கள் அனைவரும் சென்ற பிறகு, தனியே ஒருத்திமட்டும் அவர்களுடன் கலந்து கொள்ளாமல் பின்னல் வந்து கொண்டிருந்தாள். தற்செயலாக நாராயணனின் பார்வை அவள்மேல் விழுந்தது. அவளும் பார்த்தாள். "ஆ! அந்த முகம்......"

மறுமுறையும் நாராயணனுக்கு அந்தமுகத்தைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. மறுமுறையும் அவள் பார்த்தாள். இளமை பொங்கி மினுமினுக்கும் பொன்முகம். சுருண்டு நெளி நெளியாகக் காற்றில் விளையாடும் கருங்கூந்தல்; அகன்று நீண்ட பெருங் கண்களில் மிரண்டு ஒளியும் வண்ண விழிகள்...... ஆனல் அந்தச் சுந்தர நிலவு முகத்தை ஒருசோகத்திரை மூடியிருந்தது. அந்தத் திரையின் பின்னிருந்த அந்த வதனத்திற்குத்தான் என்ன கவர்ச்சி!

நாராயணனுக்கு நாவல் ருசிக்கவில்லை. அவர் அந்தப் பெண்ணின் முகத்தை மூடியிருந்த பயங்கரப் புகைமண்டலத்தைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருந்தார். அவளுக்கு வாளிப்பான தேகம் இருந்தது; காந்தம் போன்ற கண்களும், ரோஜாவை ஒத்த அதரங்களும் இருந்தன. அவள் அன்று காலை மலர்ந்த புதுமலரைப் போல அழகாகவும், இனிமையாகவும், புதுமையாகவும் இருந்தாள். ஆனல் அவள் யாருக்காக அப்படி இருந்தாள்?— அவளுக்காகவும் இல்லை; வேறு யாருக்காகவும் இல்லை. அப்படியென்ருல் இயற்கை ஏன் அவளுக்கு இவ்வளவு அரிய செல்வங்களை வாரி வழங்கியிருக்கிறது?

ஒருமுறை பார்த்தால் மறக்க முடியாத மிகச் சில முகங்களில் ஒன்று அவளுடைய முகம்.

மறுநாள்மாலை வழக்கம்போல் வாய்க்கால் பக்கம் போன போது மற்ற பெண்கள் காணப்படவில்லை. அவள் மட்டிலும் கூட ஒரு பையனுடன் வந்து கொண்டிருந்தாள். பையன் வேறு யாருமில்லை, சுப்புவின் பிள்ளை பசுபதி! உபாத்தியாயரைத் தாண்டிச் செல்லும் போது "இவர்தான் அக்கா நம்ம ஸார்; தினம் நான் சாதம் கொண்டுபோய்க் கொடுக்கிறேனே அவர்" என்ருன். இருவர் காதிலும் இது விழுந்தது. இரு

வரும் பார்த்தார்கள். அந்தப் பெண்ணின் முகம் முன்னிலும் அதிகமான சோகத்தைப் பிரதிபலித்தது.

3

சுப்பு ஒருநாள் நாராயணனிடம் கூறினார். "நம்ம ஜயா கதையை ஏன் கேட்கிறீங்க? நீங்க தான் பத்திரிகையிலே பார்த்திருப்பீங்களே! எல்லாப் பத்திரிகையிலேயும் போட்டானே! கல்யாணம் ஆன அதே நாள் மாப்பிள்ளை செத்துப் போயிட்டான் ஸார்" என்றார் எவ்வித உணர்ச்சியுமின்றி. அவருக்கு இதைச் சொல்லிச் சொல்லி மரத்துவிட்டது. இப்போது மிஞ்சியிருப்பது பத்திரிகையில் வந்த பெருமைதான்.

நாராயணன் தனக்குள் பொங்கினார். பல நாட்கள் ஜயாவைக் காணும் சந்தர்ப்பம் வந்த போதும், அதைத் தடுக்கவிரும்பினார். முடியவில்லை. அவர் விருப்பத்திற்கு அவ்வளவு வலிமை கிடையாது.

ஒருநாள் சுப்புவின் பையன் பசுபதியும் நாராயணனும் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருக்கும் போது "உங்களுக்கு எந்தக் காய்கறி அதிகம் பிடிக்கும் ஸார்?" என்றான் பசுபதி.

"கத்திரிப்பிஞ்சு, வெண்டிக்காய், முருங்கை..." இப்படிச் சொல்லிக் கொண்டுபோன நாராயணன் ஏதோ நினைவுக்கு வந்தவர் போல் சட்டென்று பேச்சைநிறுத்தி, "ஏன் இதைக் கேட்கிறாய்?" என்றார்.

"ஒன்றுமில்லே ஸார்" என்று சிரித்தான் பையன். "இல்லே சொல்" என்று பிடிவாதம் பிடித்த பிறகு "ஜயா அக்கா கேட்கச்சொன்னா, ஸார்" என்றான்.

நாராயணனுக்கு இதைக் கேட்டவுடன் இதயமே எங்கோ நழுவி விட்டது போலிருந்தது. ஆனால் அதே இதயம் மறுநாள் சாப்பாட்டில் ஒரே கத்திரிப் பிஞ்சும் வெண்டைக்காயுமாய்க் கலந்திருப்பதைக் கண்டு மகிழ்வடைவதா, துக்கப்படுவதா என்று தெரியாமல் தவித்தது.

திடீரெனச் சுப்பு உடல்நலமில்லாமல் படுத்துவிட்டார். அவர் தமக்கையும் பையனும் ஊரில் இல்லை. பள்ளிப்பையன் வேறொருவன் மூலம் சாப்பாடு வந்து கொண்டிருந்தது.

நாராயணன் சுப்புவைக் கவனித்து வருவதற்காக முதல் முறையாக அவர் வீட்டிற்குப் புறப்பட்டார். அப்போது கட்டிலில் படுத்திருந்த சுப்புவுக்குப் பக்கத்தில் ஜயா உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் அரிசிக் கஞ்சி சூடாக இருந்தது.

நாராயணனைப் பார்த்த ஜயா அவசரமாக எழுந்து உள்ளே ஓடினாள். சுப்புவும் கட்டிலில் இருந்து எழுந்திருக்க முயன்றார். அவரைக் கையமர்த்திவிட்டுத் தாமே எடுத்துக் கஞ்சியைக் கொடுத்தார் நாராயணன். சுப்புவும் அவர் கொடுக்கிறாரே என்ற காரணத்தால் பிடிவாதமில்லாமல் நிறையச் சாப்பிட்டார். இதைச் சன்னலின் பக்கத்தில் நின்று கண்ணிமைக்காமல் பார்த்துக்

கொண்டு நின்றாள் ஐயா. நாராயணன் சுப்புவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார்; ஏற்கனவே தாம்சொல்லியிருந்த வைத்தியரை அனுப்புவதாகக் கூறினார்; விரைவில் குணமடையும் என்றும் ஆறுதல் தெரிவித்தார்.

“இங்கேயே சாப்பிட்டு விடுங்களேன்” என்றார் சுப்பு.

“இல்லை, எடுத்துக்கொண்டு செல்கிறேன்” என மறுத்தார் நாராயணன்.

சுப்புவின் வேண்டுகோளைக் கேட்டு மலர்ந்த ஐயாவின் முகம் நாராயணனின் பதிலால் வாடியது. இதைக்கண்ட நாராயணன் தமக்குள் பெருமூச்செறிந்தார்.

“கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்” என்று அவர் ஐயாவிடம் சொல்லும்போது ஐயா அவரையே பதுமைபோல் நோக்கிக் கொண்டிருந்தாள்.

4

கிராமத்துக் காற்றில் பொய்யான கதை உலவியது. ஐயாவின் காதுக்கும் நாராயணனின் செவிக்கும் எட்டும்படி பலர் பேசிக்கொண்டார்கள். தினம் அவள் கடிதம் எழுதிக்கொடுத்தாளாம், அவர் பதில் அனுப்பினாராம்! விரைவில் பகிரங்கமாக அவருடன் அவள் இருக்கப் போகிறாளாம்! இப்பொழுதிருந்தே எந்த விதத்தில் சுப்புவை ஒதுக்கிவைப்பது என்பதுபற்றித் திட்டங்கள் திண்ணைக் கச்சேரிகளில் உருவாயின.

தனிமையிலே ஐயா கண்ணீர் வடித்தாள்.

தனிமையிலே நாராயணன் பெருமூச்செறிந்தார்.

தாயார் விட்டிலிருந்த நாராயணனின் மனைவி அடிக்கடி அன்புக் கடிதங்கள் அவருக்கு எழுதிக்கொண்டிருந்தாள். கடைசியாக ஒருவருக்கும் தெரியாமல் மேல் அதிகாரிகளுக்கு மனு எழுதிப்போட்டு நாராயணன் தன் மாறுதல் உத்தரவைப் பெற்றார். வேற்றூருக்கு மாற்றிக் கொள்ளத் தீவிர முயற்சி யெடுத்து வெற்றியும் பெற்றுவிட்டார். காரணம்? இரண்டுங்கெட்டானாய் ஊசலாடிய அவர்நெஞ்சு; அதை அப்படி ஆட்டிவைத்த அபலை ஐயா!

திடீர் மாறுதலைக்கேட்ட சுப்பு அயர்ந்து விட்டார். ஐயாவின் மூச்சு கேட்ட அளவில் நின்றுபோய், மீண்டும் வந்தது.

மாலை சுப்புவின் விட்டிற்கு வந்து “நான் இரவு நாலுமணி வண்டிக்குப் புறப்படுகிறேன்; உங்கள் அன்பை என்றும் மறக்கமுடியாது” என நாத்தழுதழுக்கக் கூறினார் நாராயணன். அவர் கண்கள் ஐயாவிடம் விடைபெற்றுக் கொள்ள முயன்றபோது, ஐயாவின் கண்கள் நீருக்குப் பின் மறைந்திருந்தன.

இரவு பன்னிரண்டுமணி......

பெட்டி படுக்கை எல்லாம் எடுத்து வைத்து ஆயத்தமாய்த் தம் அறையில் உட்கார்ந்திருந்தார் நாராயணன். அவருக்குத் தூக்கம் வரவில்லை; தூங்கவும் விரும்பவில்லை.

அந்தக் கிராமத்தில் நடந்த சம்பவங்களை ஒவ்வொன்ருக எண்ணிப்பார்த்துக்கொண்டே விழித்திருந்தார். பத்துமணி வரையில் அங்கு தங்கிப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, சுப்பு பிரியாமனத்துடன்விடைபெற்றுக் கொண்டார்—அன்று இரவுக் கடைசிச் சாப்பாட்டில் என்ன தெரியுமா? கத்தரிப்பிஞ்சு, வெண்டைக்காய், முருங்கை...

சும்மா சாத்தியிருந்த கதவு திறந்தது. கண்களைக் கூர்மையாக்கி நோக்கினுர் நாராயணன். அங்கே ஜயா நின்று கொண்டிருந்தாள். நன்ருகப் பார்த்தார். அவர் நினைவின் மாயா உருவத் தோற்றமல்ல அது. உயிரும் உடலும் நெஞ்சும் நினைவும் சேர்ந்து துடிக்கும் இளம் பெண் ஜயா அவள்!

"ஜயா!"

அவள் உள்ளே வந்தாள்.

"இங்கு எங்கே வந்தாய், இந்த நேரத்தில்?"

அவள் பேசவில்லை. அவள் இதழ்கள் துடித்தன.

நாராயணன் தவித்தார்; கலங்கினுர்; மகிழ்ந்தார்; துடித்தார்; தமக்குள் அழுதார்.

"ஜயா, போய்விடு!"

ஜயா கீழேவிழுந்தாள் அவர் காலடியில். தீனமாக அவரைப் பார்த்தாள். "நான் போக முடியாது" என்று தீர்மானமாகக் கூறின அவள் கண்கள்.

"நான் கல்யாணமானவன். குழந்தை உள்ளவன். உன்னை அழைத்துக் கொள்ள ......"

ஜயா வாய்திறந்தாள்.

"நான் அழைத்துக் கொள்ளச் சொல்ல வில்லை......"

ஒரு கேள்விக்குறி நெற்றியில் வளைய அவளை நோக்கினுர். வெறுப்பு, விருப்பு, அனுதாபம், தாபம் இத்தனையும் அந்த அறையில் வட்டமிட்டன. மங்கலான விளக்கு வெளிச்சத்தில் பூரணப்பொலிவுடன் ஒரு பூரணமான பெண் அங்கு அவர் காலடியில் உட்கார்ந்திருந்தாள்.

காற்று வெளியே வேகமாக விசியது. ஆந்தைக்குரல் சோடியாய் ஒலித்தது. இயற்கை, மனிதன் தனக்குள் ஏற்படுத்திக் கொண்டுள்ள பலவிதச் சம்பிரதாயங்களையும் சட்டதிட்டங்களையும் வென்று தன் ஆட்சியை அங்கே நிலைநாட்டியது. —அறைக்குள் இருள்...

ஜயாவை வெளியே அனுப்பும்போது தன் கரத்தால் அவள் கண்களைத் துடைத்தார் நாராயணன்.

ஃ ஃ ஃ

வேற்றூரில் வேலை ஒப்புக் கொண்ட தினம் நாராயணனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் ஜயா எழுதியிருந்தாள்:

"நான் வாழ்ந்தால், அது சாவை விட மோசமானது. ஆகையால் வாழ்வைமுடித்துக் கொண்டேன். அந்த முடிவுக்கு வந்த பின்னர்தான் தங்களைச் சந்தித்தேன். அந்த இன்ப நினைவுடன் இறக்கச் செய்யும் தங்களுக்கு நன்றி"

●

மாணவரைக் கண்டறியா

ஆசிரியர்

அறிவியற் கட்டுரை: நா. கி. நாகராசன்

தன் மாணவர்களை எப்போதும் கண்ணுற் பார்த்தும் அறியாத ஆசிரியர்கள் வருங்காலத்தில் ஏற்படத்தான் போகிறார்கள். தொலைக்காட்சி (Television) என்னும் தற்கால விந்தையின் உதவியால், ஒரு பேராசிரியர் ஓரிடத்திற் பாடஞ் சொன்னால் அதைப் பல கல்லூரிகளில் ஒரே காலத்தில் கண்டும் கேட்டும் பயனடைய முடியும் என அண்மையில் அமெரிக்காவில் நடைமுறையிற் செய்து காட்டப்பட்டது. பழங்கால இந்தியாவில் ஒரு குருவிற்கு நான்கைந்து சிடர்களுக்குமேல் இரார். ஆனால் இப்போதோ ஒரு பேராசிரியர் நூறு மாணவர்களுக்கும் மேற்பட்ட வகுப்பை நடத்துவது மிகப்பொதுவான நிகழ்ச்சியாய் விட்டது. தொலைக்காட்சியில் வகுப்பு நடத்தும் முறை வழக்கத்திற்கு வந்தால் ஓராசிரியர் பல்லாயிர மாணவர்களுக்குப் பாடஞ் சொல்ல இயலும்.

ஆனால் இது வருங்காலத்தைப் பற்றிய பேச்சு. ஆகையால் இதனால் பல கல்லூரி ஆசிரியர்களது பிழைப்புக்கே கேடுவருமென அஞ்சி அவர்கள் அரசினரைப் பேட்டிகாண வேண்டியதில்லை! தொலைக்காட்சியை இத்தகைய பயன்களுக்கும் ஈடுபடுத்தலாம் என்பதையே நாம் தற்போது நினைவுகூரவேண்டும். இப்போது தொலைக்காட்சி பொழுது போக்காக மட்டும் பயன்படுகிறது. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் நிலையத்தில் நிகழும் நாடகம், நடனம், முதலியவற்றையும், மைதானத்தில் நடக்கும் ஆட்டப் பந்தயங்களையும் நெடுந் தொலைவிலுள்ளோரும் தம் வீட்டிலுள்ளவாறே கண்டு களிக்க இது பயன்பட்டு வருகிறது. சின்னாட்களுக்குமுன் காந்தியடிகளின் திருவுருவம் இங்கிலாந்தில் தொலைக்காட்சியில் காட்டப்பட்டது அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

நிற்க, பேச்சைப்போலவே படங்களையும் ரேடியோ அலைகளால் நாற்புறமும் பரப்பலாம் என்பது பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளியாகியது. தொலைக்காட்சியைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வந்துள்ளனர். அவர்களது சலியாத உழைப்பினாலேயே இம் முறை இவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. ரேடியோவில் பேச்சை அலைபரப்பப் பேச்சலைகள் மின்சார அலைகளாக மாற்றப்பட்டு அலைபரப்பியின் உதவியால் விசும்பிற் பரப்பப்படுகின்றன. தொலைக் காட்சியிலும் இதே வகையில் படத்திலிருந்துவரும் ஒளி மின்சார அலைகளாக மாற்றப்படுகிறது. இதுவே தொலைக்காட்சியின் தத்துவம்.

ஒளியாற்றல் மின்சார ஆற்றலாக எவ்வாறு மாறுகிறது என்பதை யறியுமுன் பூதநூல் ஆய்வு களத்தில் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வினைவை யறிதல் அவசியம். செம்பு, சாம்பரம் (*Potassium*), சீசியம் (*Caesium*) முதலிய சில உலோகங்களில் மட்டும் இது நிகழ்கிறது. இத்தகைய ஒருலோகத்தாலான தட்டின் மேல் ஒளிக்கதிர்கள் விழுமாறு செய்தால் அதிலிருந்து மிகச் சிறிய மின்னோட்டமொன்று தோன்றுகிறது. இம்மின்னோட்டம் ஒளியின் அடர்த்தியையும், நிறத்தையும் பொருத்திருக்கும். இது ஒளிமின்னோட்டமெனவும், இவ்வினைவு ஒளிமின்னியல் (*Photo-electricity*) என்றும் கூறப்படும். இதைப்பற்றிய ஆராய்ச்சிகளை முதன் முதல் நடத்திய பெரியாருள் நம்நாட்டு விஞ்ஞான அறிஞரான ஜகதீச சந்திர போசும் ஒருவர் என்பதை நாம் பெருமையோடு நினைவுகூரவேண்டும். உலோகத் தட்டொன்றை ஒரு குமிழுக்குள் அமைத்து ஒளிக்கதிர்களை அதன் மேல் விழச்செய்து அதில் மின்னோட்டத்தைத் தோற்றுவித்து அதை விரும்பியவாறு பயன்படுத்தலாம். இத்தகைய அமைப்பு "ஒளிமின் கடம்" விளங்குகிறது. இது பயன்படாத துறையே இக்காலத்தில் இல்லையெனலாம். காவற்காரனுக்கும், காவல் நாய்க்கும் கடுக்காய் கொடுத்துவிட்டு வீட்டிற்குள் நுழையும் திருடனைக் கண்டுபிடிக்கவும் பேசும் படத்தில் நமது 'நட்சத்திரங்களின்' சகிக்காத இசையை நாம் கேட்டே தீருமாறு செய்யவும், தூங்கிவிழும் போலீசுக்காரனது உதவியின்றியே நாற்சந்தியில் வண்டிகளுக்கு வழிகாட்டவும், மதுவில் திளைத்துத் தள்ளாடி வெளியேறும் குடியனைக்கண்டு தானாகத் திறக்கும் ஓட்டல் கதவுகளிலும் ஒளிமின் கடமே பயன்படுகிறது. இதன் நூற்றுக்கணக்கான பயன்களை ஈண்டுக் குறிப்பினும் பெருகும். தொலைக் காட்சியில் ஒளிமின்கடமே இன்றியமையா உறுப்பு.

பல அறிஞரால் ஆராயப்பட்டு ஆங்கில விஞ்ஞானியான பெயர்ட் (*Baird*) என்பவரால் சீர்திருத்தப்பட்ட தொலைக்காட்சி முறையொன்று அண்மைவரை வழக்கிலிருந்தது. இதில் ஒரு படத்தை அலைபரப்ப அதன்மேல் மிகப் பிரகாசமான விளக்குகளின் ஒளி விழுமாறு செய்யப்படும். படத்தின்மேல் விழும் ஒளி நாற்புறமும் சிதறுகிறது. படத்தின் முன் வெகுவேகமாகச் சுழலும் சக்கரமொன்று இருக்கும். அதில் சுருள் வடிவாய்ப் பல துளைகள் இருக்கும். படத்திலிருந்து வரும் ஒளி சக்கரத்தையடைந்து அதன் துளைகளின் வழியே மறுபுறத்தையடையும். சுருளாக அமைந்துள்ள துளைகளின் வழியே செல்லும் ஒளியை மறுபுறத்திற் கண்டால், படத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியாகப் பார்ப்பது போலிருக்கும். ஆகையால் படத்தைப் பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வரும் ஒளியை அடுத்தடுத்து இம்முறையாற் பெற முடிகிறது. இவ்வாறு வரும் ஒளி ஓர் ஒளிமின்கடத்தையடையுமாறு செய்யப்படும். ஆகையால் அதில் ஒவ்வொரு

பகுதிக்கும் ஏற்ற மின்னோட்டம் தோன்றும். இது சிறு மின்னதிர்வுகளாக இருக்கும். இவை ரேடியோ அலை பரப்பியை (Tra-nsmitter) அடைந்து மின்னலைகளாக வானவெளியிற் பரப்பப் படுகின்றன.

இவ்வகையிற் பரவும் மின்னலைகள் வீடுகளிலுள்ள அலை வாங்கியை யடைந்து அதில் அதே மின்னதிர்வுகளை மறுபடியும் தோற்றுவிக்கின்றன. இம்மின்னதிர்வுகள் தனிவகை விளக்கொன்றை யடைந்து அதன் வழியே பாய்கின்றன. இவ்விளக்கின் வழியே பாயும் மின்னோட்டத்திற்கேற்ப இதன் ஒளியும் வேறுபடும். ஆகையால் தொடர்ந்து மாறுபடும் ஒளியை இவ்விளக்கு அளிக்கிறது. இதை அலை பரப்பியிலுள்ள சக்கரத்தை முற்றிலும் ஒத்த இன்னொரு சக்கரத்தின் வழியே நோக்கினால் அலைபரப்பப்படும் காட்சியே தென்படும். சக்கரங்கள் வெகு வேகமாகச் சுழன்றாலொழியப் படம் தெளிவாக இராது. அதன் தன்மை சிறிதும் கெடாதிருக்க இரு சக்கரங்களும் ஒரே வேகத்தில் சுழல்வதும் இன்றியமையாதது. இவ்வாறு அமைத்தல் எவ்வளவு கடினமானது என்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால் இம்முறை தொல்லை மிகுந்ததாகும். இதில் தெரியும் படமும் தெளிவற்றுவிளங்கும். ஆகையால் இது அவ்வளவாக வழக்கத்திற்கு வாராததில் வியப்பில்லை.

ஆனால் தற்காலத்தில் வழங்கும் முறையில் இத்தகைய தொல்லைகள் இல்லை. இது எவ்வாறு இயங்குகிறது என்பதையறிய, பொருள்களின் தன்மையையே ஓரளவு ஆராயவேண்டும். பொருள்கள் எல்லாம் அணுக்களாலானவை. அணுக்களை மின்சாரத் தன்மை கொண்ட இரு துகள்களாகப் பிரிக்கலாம். அவற்றுள் ஒன்று மின்னணு எனப்படும். இவை மிக இலேசானவை. கோடிக்கணக்கான மின்னணுக்களை ஒன்று சேர்த்து அவற்றை நிறுக்க இயன்றால், அவற்றின் நிறை இங்குள்ள ஓரெழுத்தின் நிறையை விடப் பன்மடங்குக் குறைவாக விருக்கும்! ஆகையால் இத்துகள்களை நிறையற்றவை எனல் பிழையாகாது. மின்சாரவிளக்கின் தந்தித்திரி செய்யப்பயன்படும் துங்கதம் (Tungsten) என்னும் உலோகக் கம்பியைச் சூடேற்றினால் இதிலிருந்து ஏராளமான மின்னணுக்கள் வெளியேறுகின்றன. இவற்றை மின்சார மேறிய தட்டுகளைக்கொண்டு குறுகிய கற்றையாகச் செய்யலாம். இத்தகைய மின்னணுக்கற்றையே தற்காலத் தொலைக் காட்சியில் பயன்படுகிறது.

இக்கருவியில் அலைபரப்பப்படும் காட்சியின்படிவமொன்று ஒரு திரையின்மேல் விழுமாறு செய்யப்படும். இத்திரை தொலைக்காட்சியின் படப் பதிவுக் கருவியில் உள்ளது. இது காக்கைப் பொன்னால் ஆனது. அதன்மேல் ஒளிமின் விளைவை நிகழ்த்தும் சிசியம் என்னும் உலோகம் சிறு துளிகளாகப் படிந்திருக்கும். இத்துளிகள் ஒவ்வொன்றும் ஓர் ஒளிமின் கடத்திற் கொப்பாகும். ஆகையால் அவற்றின்மேல் விழும் ஒளிக்கேற்ப அவற்றில் மின்சா

ரம்தான் நிகிற்கும். ஆகையால் ஒளிக்கதிர்களாலான படிவம் திரையின்மேல் மின்சாரப் படிவமாக மாற்றப் படுகிறது. இம் மின்சாரப் படிவத்தைத் தனித் தனியே பிரித்து மின்னதிர்வுகளாக மாற்ற மேற்கூறிய மின்னணுக்கற்றை பயன்படுகிறது.

தொலைக்காட்சிக் கருவியின் திரைமேலுள்ள படிவத்தின் பலபகுதிகளில் இக்கற்றை வெகுவேகமாக விழுமாறு செய்யப்படும். இதிலுள்ள மின்னணுக்கள் திரையின்மேல் நிற்கும் மின்சாரத்தைப் பாதிக்கின்றன. இத்திரை கருவியின் மற்றபகுதிகளோடு இணைக்கப் பட்டிருப்பதால் அங்கு இதனால் மின்னதிர்வுகள் தோன்றுகின்றன. ஆகையால் மின்னணுக்கற்றை படிவத்தின் பல பகுதிகளைத்தாக்கி அவற்றிற்கேற்ற மின்னதிர்வுகளைத் தோற்றுகிறது. இவற்றை அலைகளாக வானவெளியில் பரப்பலாம்.

வீட்டிலுள்ள தொலைக்காட்சிக் கருவியிலும் இவற்றையொத்த விளைவுகள் நிகழ்கின்றன. வானவெளியிலே வரும் மின்னலைகள் வாங்கியையடைந்து அங்கு மின்னதிர்வுகளைத் தோற்றும். இங்கும் ஒரு மின்னணுக்கற்றை தனிவகைப்பட்ட திரையொன்றின் மேல் விழுமாறு செய்யப்பட்டிருக்கும். இத்திரையில் ஒரு இரசாயன உப்புத் தடவப்பட்டிருக்கும். இதனால் மின்னணுக்கள் விழும் இடத்தில் திரை பிரகாசமாய் ஒளிர்கிறது. வாங்கியில் நிகழும் மின்னதிர்வுகள் இக்கற்றையைப் பாதித்து அது பலபகுதிகளை வெகுவிரைவாய்த் தாக்குமாறு செய்கின்றன. இதனால் அப்பகுதிகள் அடுத்தடுத்து ஒளிர்கின்றன. இது மிக விரைவாய் நிகழ்வதால் இம்மாறுதல்களைத் தனித்தனியே நம்கண் பிரித்தறிய இயலுவதில்லை. ஆகையால் திரையில் நாம் தொடர்ச்சியான படிவத்தைக் காண்கிறோம். இவ்வகையில் தொலைவில் நிகழும் காட்சிகள் நம் வீட்டில் தெரியுமாறு செய்யப் படுகின்றன.

ரேடியோவில்பயன்படும் அலைகள் பல்வேறுநீளங்கள் கொண்டவை. டெல்லி நிலையத்தின் நிகழ்ச்சி நமது வாங்கியில் கேட்கும் போது அது சிற்றலைகளாக வருகிறது. திருச்சி நிலையம் நெட்டலைகளில் ஒலி பரப்புகிறது. தொலைக் காட்சியில் மிகக் குறுகலான சிற்றலைகள் மட்டும் பயன்படும். இவை அதிகத் தொலைவு செல்லமாட்டா. ஆகையால் தற்காலத்தில் தொலைக் காட்சியால் படங்களைச் சில மைல்தொலைவு வரையில் மட்டும் அனுப்பமுடியும். இக்குறையைத் தவிர்க்க இரு இடங்களுக்கிடையே ஆங்காங்குப் பல இடை நிலையங்கள் (*Relay Stations*) அமைத்து நெடும் தொலைவுக்குத் தொலைக் காட்சிமுறை பயன்படுமாறு செய்யலாம். இப்போது லண்டனிலிருந்து பர்மிங்ஹாமுக்குத் தொலைக் காட்சியால் படங்களை அனுப்ப இம்முறையைக் கையாள முடிவுசெய்துள்ளனர். இம்முறை சீர்திருத்தப் பட்டால் ஆஸ்திரேலியாவில் நிகழும் கிரிக்கெட் பந்தயத்தை நம் வீட்டிலிருந்தே கண்டு களிக்க முடியும்!

உருது இலக்கியம்

கா. அப்பாத்துரை

உருது மொழியின் தோற்றம்

உருதுமொழி இன்று இந்தியாவின் பெரும் பகுதியிலுள்ள முஸ்லீம்களால் தங்கள் நாகரிகத்தின் சின்னமான நாட்டுமொழி என்றுகருதப்படுகிறது. உருது இலக்கியமும் இந்திய முஸ்லிம் புலவர்களின் முயற்சியால் வெளிநாட்டு முஸ்லிம் இலக்கிய மொழியாகிய பாரசிகத்தின் முன் மாதிரியுடன் கட்டமைக்கப்பட்ட இலக்கியமே. ஆயினும் மொழியைப் பொறுத்தவரை, அது தோன்றக் காரணமாயிருந்தவர்கள் இந்திய முஸ்லிம்களல்ல; வடநாட்டு இந்துக்களே.

பிரிட்டிஷார் ஆட்சியில் எப்படி உயர் பணிகளில் பெரும்பாலும் உயர்குடி இந்துக்களே அமர்த்தப் பட்டுள்ளனரோ, அது போலவே முகலாயப் பேரரசர் ஆட்சியிலும் உயர்குடி இந்துக்களே வடநாட்டில் உயர் பணியாளராய் இருந்தனர். முகலரசின் அரசியல் மொழியாயிருந்த பாரசிகத்தை இவ் இந்துக்கள் தமதெனப் பேணிக் கற்று, அதிலேயே பேசவும் எழுதவும் தொடங்கினர். தலைநகரான தில்லியில் பேசப்பட்ட நாட்டு மொழியுடன் பாரசிகச் சொற்களை அவர்கள் (இன்று வடமொழியும் ஆங்கிலமும் கலப்பது போலவே) கலந்து ஜபான்-ஈ-ரெக்தா (சிதறிய சொல் மொழி அதாவது பாரசிகச் சொற்கள் பரவிய மொழி) என்ற கலவை மொழியைத் தோற்றுவித்தனர். இதன் இலக்கிய வடிவமே உருது மொழி.

உருதுவும் இந்தியும்

வட இந்தியாவில் நாற்புறமும் புறக்கோடிகளில் வழங்கிய குஜராத்தி, மராத்தி, வங்காளி, பஞ்சாபி, சிந்தி முதலிய மொழிகள் பெரும்பாலும் எல்லை வரையறையுடையதாய் நில மொழிகளாயிருந்தன. பின்னாளில் அவை எளிதாக இலக்கிய மொழிகளாகவும் வளர்ச்சியடைந்தன. ஆனால் வடநாட்டின் நடுப்பகுதி முழுவதிலும் ஒழுங்கான நில எல்லையோ, உருவோ, தொடர்ச்சியாக ஒரு பெயரோ கூட இல்லாத பல மொழி வகைகள் நிலவின. இவை ஒவ்வொன்று ஒவ்வொரு காலத்தில் இலக்கிய வடிவடைந்ததும் இறந்துபட்டன. இந்நிலையில் இறந்துபட்ட மொழி வகைகள் மேலை நடு நாட்டு மொழிகளாகிய ராஜஸ்தானி, விரஜபாக்கா கீழை நடு

நாட்டு மொழிகளாகிய மைதிலி, பீகாரி முதலியவை ஆகும். இவற்றின் சிதறிய சிற்றிலக்கியங்களையே திரட்டிப் பழய இந்தி இலக்கியமென இன்றைய இந்திப் புலவர்கள் கொள்கின்றனர்.

நடு நாட்டில் இலக்கிய வடிவும் வளர்ச்சியும் பெற்ற மொழிகள் இந்தியும் உருதுவுமே. இவை இரண்டுக்குமே தெளிவான தாய் நிலப்பரப்புக் கிடையாது. ஏனெனில் இரண்டுக்கும் நிலைக்களனான பகுதி கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியும் (ஐக்கிய மாகாணங்கள்) நடு இந்தியாவும் (மத்திய மாகாணங்கள்) ஆகும். இரு மொழிகளுக்கும் கருநிலையாயிருந்த தாய் நில மொழி தில்லியில் பேசப்பட்ட கலவை நாட்டு மொழியாகிய ஜபான்-ஈ-ரேக்தாவே. இதனுடன் பின்னும் மிகுதியான பாரசிகச் சொற்களும் பாரசிக இலக்கிய மரபுகளும் சேர்த்து உருவாக்கப்பட்ட முஸ்லிம் இலக்கிய மொழியே உருது. நேர்மாருக இந்து தேசிய இயக்கத்தவர் இதிலுள்ள பாரசிகச் சொற்களை விலக்கி வடமொழிச் சொற்களையும் வடமொழி இலக்கிய மரபுகளையும் புகுத்தி விரிவுபடுத்திய இந்து இலக்கிய மொழியே இன்றைய உயர் இந்தி அல்லது இலக்கிய இந்தி மொழி ஆகும்.

ரேக்தா, இந்துஸ்தானி, உருது.

14-ம் நூற்றுண்டுக்கு முன் வட இந்தியாவில் நாட்டு மொழிகள் எதுவும் இலக்கிய வடிவடையவில்லை. இலக்கிய வடிவு பெற்ற மொழிகளும் வடநாட்டில் இறந்துபட்டதனால் அவை நாட்டு மொழித் தன்மையை இழந்து வந்துள்ளன. அந்நூற்றுண்டில் ராஜஸ்தானியிலும் தில்லி மொழியிலும் விரஜாபாக்ஷாவிலும் நாட்டிலக்கியம் பயிலப்பட்டது. இவற்றுள் தில்லி மொழியில் எழுதியவர் பேர்போன பாரசிக மொழிக் கவிஞரான அமிர் குஸ்ரூ. இவர் நாட்டு மொழியில் இயற்றிய பல பாக்கள் இன்று இந்தி, உருது இரு மொழியாளரிடையேயும் பரக்க வழங்குகின்றன. தில்லி மொழி 'ரேக்தா' ஆனபின் அதுவே ஆங்கிலேயரால் இந்துஸ்தானி என்றழைக்கப்பட்டது. அவுரங்கசீப் காலம் வரை அது வட இந்தியாவில் பேச்சு மொழியாகவே இருந்தது. இலக்கிய வடிவம் பெறவில்லை.

முதன் முதல் இந்துஸ்தானி இலக்கிய வடிவமடைந்து உருதுவாகத் தொடங்கியது வட இந்தியாவிலன்று; தெக்காணத்தில் தெலுங்கு நாட்டில் ஏற்பட்ட முஸ்லிம் அரசாகிய கோலகொண்டாவிலும், கன்னட நாட்டில் அமைந்த முஸ்லிம் அரசாகிய பிஜப்பூரிலுமேயாகும். அங்கிருந்து அரங்கசீப் காலத்துக்குப் பின் (18-ம் நூற்றுண்டில்) அது தில்லி நகரடைந்து அங்கும் நாதர்ஷாப் படையெடுப்பின் பின் லக்னேவிலும் ஆங்கில ஆட்சியாளர் கல்வித்துறையை மேற்கொண்டதன் பின் (19-ம் நூற்றுண்டில்) கல்கத்தாவிலும் பரவி வளர்ச்சியடைந்தது. இலக்கிய இந்தி உருதுவின் கடைசி வளர்ச்சிக் காலத்தில் (19-ம் நூற்றுண்டில்) கல்கத்தா

விலிருந்தே உருவாயிற்று. புதிய தேசிய வாழ்வைப் பிறப்பித்த வங்கத்தாயே புதிய இந்தியின் தாயகமாகவும் உருதுவின் வளர்ப்புத் தாயாகவும் விளங்கிற்றென்னலாம்.

உருது இலக்கிய வரலாறு

உருது மொழி இலக்கிய வளர்ச்சியை முதிரா வடநாட் காலம், தெக்காண காலம், தில்லி முதற் காலம், லக்னோக் காலம், தில்லி இரண்டாம் காலம், கல்கத்தா அல்லது அண்மைக் காலம், ஹைதராபாத் காலம் அல்லது தற்காலம் என ஏழு பிரிவாக வகுக்கலாம். இவற்றுள் முதிரா வடநாட்டுக் காலத்தில் அமீர் குஸ்ருவின் ஒரு நூலன்றி வேறு இலக்கிய வளர்ச்சி கிடையாது. ஆயினும் 1235-ல் பிறந்து, 1324-ல் இறந்த இவர் அடிமை, கில்ஜி, துக்ளக் என்ற மூன்று அரச மரபுகள் கண்டு, பதினொரு அரசர்கள் காலத்தில் வாழ்ந்து இவர்களுள் 7 அரசர்களுடன் தொடர்பும் உடையவராவர் என்பது குறிப்பிடத் தக்கது. வடமொழியிலுள்ள கிளி எழுபது (சுகசப்ததி) என்ற காப்பியத்தைப் பாரசிகத்தில் 'தூதிகஹானி' என்ற பெயருடன் எழுதியவர் இவரேயாவர். இவர் எழுதிய ஒரே நாட்டு மொழி நூலின்பாக்களே இன்று மொழி வேற்றுமையின்றி எல்லா நடு நாட்டு மொழியினராலும் வழங்கப்படுவது.

தெக்காண காலம்
(16—18 நூற்றாண்டுகள்)

கோலகொண்டாவின் மன்னர் முகமது குலிகுதுப்ஷா (1580—1621) அப்துல்லா குதுப்ஷா (1625—1656) ஆகியவர்களும் பிஜப்பூரின் மன்னர் இரண்டாம் இப்ராஹிம் அடில் ஷாவும் தாமே கவிஞர்களாகவும் கவிஞர் புரவலராகவும் இருந்தனர். இவர்கள் வழங்கியமொழி தில்லி மொழியாயினும் தில்லியுடன் தொடர்பற்றுப் பழம் பசலியாய் விட்டது. இதனை இன்று தெக்காணி என்று வழங்குவர். குலிகுதுப்ஷாவின் காலப் புலவர் 'நூரி' தெக்காணியில் பாரசிகமரபுப்படி முதல் காப்பியம் (திவான்) எழுதியவர் ஆவர். இதிலுள்ள பாடல்கள் 50,000 என்றும் அதில் பாரசிக மொழியில் வழங்கிய எல்லாப் பாடல் வகைகளும் உள்ளன என்றும் கூறப்படுகிறது. இப்ன்நிஷாதி என்ற மற்றொரு புலவர் பாரசிகக் காப்பியமாகிய 'பசாத்தினே' 'பூல்வான்' என்ற பெயருடனும் 'கவாசி' என்பவர் அமீர் குஸ்ருவின் பாரசிக மொழிபெயர்ப்புக் காப்பியமான 'தூதிநாமா'வை உருதுவில் மறுமொழி பெயர்ப்புச் செய்தார். மௌலானா வஜிஹ் மோனை எதுகை நயத்துடன் தெக்காணியின் முதல் உரை நடைக் காப்பியம் இயற்றினர்.

பிஜப்பூர் மன்னர் அவையின் புகழ் கேட்டுப் பாரசிகத்தின் பேர் போன கவிஞர் முல்லா ஜுஹூரி அவர் அவைக்கு வந்து அவர் அவையின் பாரசிகக் கவிஞராயிருந்து பாக்கள் இயற்றினர். அரசரே கவிஞராதலால் தெக்காணியில் 'நௌரஸ்' (ஒன்பது சுவைகள்) என்ற பெயருடன் ஒரு நூலியற்றினர். இவர் காலக் கவிஞர்கள் 'அலிநாமா' எழுதிய 'நஸ்ரதி', 'யூஸுப்-

ஜமீலகா' எழுதிய பிறவிக் குருடர் ஹோஷிமி, பஹ்ராம் ஹுஸ்நபானு என்ற காதை இயற்றிய 'தௌலத்' ஆகியவர் கள் ஆவர்.


வலீயும் தில்லி இலக்கியமும் (1700—1830)

தெக்காணத்தில் வழங்கிய உருது இலக்கிய மரபைவட இந்தியாவில் கொண்டுசென்று பரப்பி, வட இந்தியாவுக்கு நாட்டு மொழி இலக்கியப் பெருமை தந்தவர் 'வலி'யே யாவர். இவர் 1668-ல் ஔரங்க பாதில் பிறந்தவர்: இளமை யிலேயே உணர்ச்சிப் பாடல் கள் (கஜல்) புகழ்ப் பாக்கள் (கஸிதா) ஆகியவற்றைப் பாடித் தாம் கலை பயின்ற நகரா கிய அகமதாபாதில் பரப்பிய வர். 1700-ம் ஆண்டுக்குள் ஔரங்கசீபின் படையெடுப் பால் தக்காண அரசியல் வாழ்வு சிரழியத் தொடங் கிற்று. அதே ஆண்டில் அவர் தில்லி சென்று தில்லியிலுள்ள பாரசிக மொழி மறைஞான (சூபி) கவிஞரை அணுகி அவர் மாணவரானார். அவர் இணக்கம் பெற்று இவர் ரேக்தா அல்லது நாட்டுமொழி யில் பாரசிக மரபுப்படி வட நாட்டில் முதல் காப்பியம் இயற்றி வெளியிட்டார். தில்லி யிலும் வட நாட்டிலும் இதன் புகழ் காட்டுத் தீயெனப் பர விற்று. அதுவரை அரசியல் மொழியாக இருந்த பாரசிக மொழியையே பேணி, அதி லேயே இலக்கியம் வளர்த்த வட நாட்டவர் நாட்டு மொழி யாகிய உருதுவிலும் பேரள வில் இலக்கியம் வளர்க்கத் தலைப்பட்டனர். இக்காரணத் தால் "வலியே உருதுவின் தந்தை" (பாபா ஆதம் உர்தூ) எனப் போற்றப் பட்டார்.

வலியைப்பின்பற்றி உருதுக் கவிதை எழுதத் தொடங்கிய பாவலர்கள் நாஜி, மஜ்மூன்; ஆபரூ, ஹாதிம் முதலியவர் கள். இவர்களுள் ஹாதிம் நகைச்சுவைக் காப்பியமாகப் புகை குடிக்கும் குழாய் (ஹுக்கா) பற்றி ஒரு பாவியல் இயற்றினார். ஆர்ஜூ என்பவர் பெரும்பாலும் பாரசிக மொழியிலேயே எழுதினும் புதிய உருதுக் கவிஞர்களுக்குக் கவிதை பற்றிய கருத்துரை களை வழங்கி வழி காட்டியா யிருந்தார். மேலும் அந்நாள் வரையுள்ள பாரசிக, உருதுக் கவிஞர்களைப்பற்றிய மதிப்புரை கலந்த வரலாறும் அவரால் எழுதப்பட்டது. தில்லியின் தலைசிறந்த கவிஞர்களுள் மீர்தகி அவர் மாணவர்.

ஹாதிமின் மாணவரான சௌதாவும் மீர்தக்கியும் தில் லிக் கவிஞருள் தலைசிறந்தவர் கள் ஆவர். சௌதா புகழ்ப் பாடல்கள் (கசிதா) வசைப் பாடல்கள் (ஹிகா) பரிவுப் பாடல்கள் (மர்ஸியா) காதை கள் (மஸ்னவி) கருத்துரைப் பாடல்கள் (ரூபாயி) ஆகிய அனைத்தும் திறம்பட எழுதி னார். ஆயினும் முதல் இரு வகைகளிலுமே அவர் மீர்தகி போன்ற தலைசிறந்த புலவர் களையும் விஞ்சியவராகக் கொள் ளப்படுகிறார். இவர் பாரசிக மரபின் எல்லை கடந்து பல புதிய துறைகளையும் கையாண் டார்.

[அடுத்த இதழில் முடியும்]



மதம் அவசியமா?

வேந்தரசன்

மதம் மக்கள் வாழ்வில் தேவையான ஒன்று என்று கேட்கப்படும் காலம் வந்துவிட்டது. இது, மதம் மறையும்! கூடிய விரைவில் ஒழிக்கப்படும்! என்பதற்கு ஒரு முன்னறிவிப்பு.

மதம் தேவையானதா? இல்லையா? என்று என் முடிவு கூறுவதற்கு முன் மதம் எப்படித் தோன்றியிருக்க வேண்டும் என்று நான் சிந்தித்துக் கண்ட முடிவைக் கூறிவிடுகிறேன்.

மனிதன் ஒருசிந்தனைசெய்யும் விலங்கு! முதலிலே தன்னைப் பற்றியும் உலகைப் பற்றியும் சிந்தித்துப் பார்த்தான். ஒரு எல்லைக்குமேல் அவனால் சிந்திக்க முடியவில்லை. அந்தச் சிந்திக்க முடியாத எல்லைக்கப்பால் தன்னையே ஆட்டிப் படைக்கும் ஒரு பெரிய சக்தி இருப்பதாக எண்ணினான். தன்னைவிட மிகப் பெரியது என்று நினைத்தான். ஆனால் அதைப்பற்றி மக்களிடம் பேச வரும்போது, தனக்கு விளங்காத ஒன்றைத் தனக்குப் புரியாத ஒன்றை மக்களிடம் சொல்ல வரும்போது, அவனுக்கு விளங்கவைக்கும் தன்மை இல்லாதுபோயிற்று. ஆனாலும் தன் கருத்தைப் பரப்பவேண்டுமென்று கருதினான். தன் கருத்தைப் பரப்பக் கற்பனையைத் துணையாக்கிக் கொண்டான். கடவுள் கையை யசைத்ததும் பூமி தோன்றியது. கருதினவுடனே கடல்வந்தது என்றெல்லாம் கற்பனை செய்து கடவுள் உண்மையை நிலைநாட்டினான்.

சிந்திக்க முடியாத மனித அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒன்றைப்பற்றி ஒருவன் கற்பனைசெய்து கூறியவற்றை 'இருக்கலாம்' என்று முதலில் எண்ணிய மனிதன், தன்னால் சிந்திக்க இயலாது போனபின்னர், 'அப்படித்தான் இருக்கும்' என்று முடிவுகட்டிவிட்டான்.

பின்னர் கற்பனைக்குமேல் கற்பனையாக வளர்ந்து, சிறு தெய்வக்கற்பனையிலும் அவற்றை வணங்குதல், உணவளித்தல், உயிர்ப்பலிகொடுத்தல் முதலிய அநாகரிக முறைகளிலும் வந்து முற்றியது மதவளர்ச்சி!

இதற்கிடையிலே மக்களிடமுள்ள நாட்டுப்பற்று, மொழிப்பற்றுப் போல மதப்பற்றும் வளர்ந்து வந்தது. இரண்டு இடங்களில்வெவ்வேறுகற்பனைகளில் வளர்ந்த இரண்டு மதக்காரர்கள் ஒன்று கூடும்போது பகையுணர்வும், அதன் மூலமாக மதவெறியும் வளர்ந்து வரலாயின.

இன்று மதம் தேவை என்று கூறுகிறவர்களெல்லாம், உண்மையான மதம் இன்றிலங்குவது அல்ல; உண்மையான மதம் மக்களை நன்னெறியிலே தோய வைப்பது, மனிதனைத் தூயோனாக்குவது என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆனால், இது வரையிலே, அவர்கள் கூறுகிறபடி ஒரு மதமும் தோன்றியதில்லை. முதலிலே மக்கள் கற்பனையின் முடிவு அநாகரிகமாக ஆகிய அந்நாளிலே தான் மதம் தோன்றியிருக்கிறது. மதத்தின் வளர்ச்சியிலே தான் மதவெறி ஓங்கியிருக்கிறது.

பழைய, தங்களுடைய மதத்தைத் திருத்த வந்த மகமது நபியைத்தான் மக்கள் அடித்து விரட்டியிருக்கிறார்கள்; நம் மதத்தை எதிர்க்கிறான் என்றெண்ணிக் கல்லாலடித்திருக்கிறார்கள். மூட மதத்தைக் காய்ந்தான் மதத்தின் பகைவன் என்றெண்ணியதால் தான் இயேசுவைச் சிலுவையில் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். நம் தத்துவங்களை மறுக்கின்றார்கள் என்று கருதியதால் புத்தனையும் புத்தமானவர்களையும் எதிர்த்துப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். இந்த மாதிரி மதத்தைச் சீர்திருத்த வந்த செம்மல்களை எல்லாம் சித்திர வதை செய்தது முழு மூடத்தனமான கற்பனைகளைத் தன்னகத்தே கொண்டு வளர்த்த மதந்தான். அப்படியானால் இன்று இயேசு மதமென்றும், புத்த மதமென்றும் அந்தப் பெரியார்களின் பெயரால் மதங்கள் இலங்குகின்றனவே, இவை பயன் தருவன அன்றோ என்று எண்ணலாம்.

ஆனால் அப்படி எண்ணும்படி இன்றைய மதம் செய்யவில்லை. நம் எதிரில் விளங்குகின்ற இன்றைய மதம் இயேசு மதமல்ல, இயேசு வழிச் செல்லும் கூட்டமல்ல, இயேசுவைக் கொன்று, குழி வெட்டிப் புதைத்துச் சமாதி கட்டிய அதே பழைய மதம் தான். மகமதுவுக்குச் சமாதி கட்டி அதன் மீதிருந்து கொண்டு ஆடுகின்ற அதே பழைய மதந்தான். புத்தரைப் புதைகுழியில் தள்ளிப் புன்னகை புரிகின்ற பழைய மதமே தான் இன்றும் இலங்குகின்றது.

ஏதோ, சீர்திருத்தங்கள் சொன்னான்; வீணாகக் கொன்று விட்டோம் என்று வருந்திய சிந்தனையாளர்களால் இயேசு, புத்தர், மகமது முதலியோர் பெயரால் அழைக்கப்பட்டாலும், அவர்கள் சொல்லிய சீர்திருத்தங்களை அடியோடு எதிர்க்கின்ற மதம் தான் இன்றைய மதம்! இதே மதம்தான் இயேசுவுக்கு முன்னிருந்த பழைய மதமும். "புத்தர் காட்டிய வழி மக்கள் போவதற்கு ஏற்றதல்ல, புது வழி ஒன்று கண்டுபிடி" என்றும் புத்தர் கொள்கைக்கு 'ஈனயானு' குறுகிய கொள்கை என்றும், அதை மறுத்தெழுந்த கொள்கைக்கு 'மகாயானு' விரிந்த கொள்கை என்றும் கூறுகின்ற இன்றைய மதம் அந்தப் பழைய மதமே தான்.

சிந்தித்துத் தெளிந்து சீர்திருத்தக் கருத்துக்களை வழங்கிய இப்பெரியோர்களைக் கொன்று, பின் இவர்கள் பெயரிலேயே தன்னையழைத்துக் கொண்டு, தான் வென்ற நாடு

தன் நாடு என்று கூறும் அரசனைப் போல, தான் கொன்ற பகைவன் பெயர் தன் பெயர் என்று கூறித் தன்னாட்சி செலுத்தி வரும் இந்த மதம் எதற்கும் தன்னை எதிர்த்தாரை ஒழித்தும் அஞ்சாமல் தன்னை வந்தடைந்தாரின் அறிவை மாய்த்தும் யாதொரு பயனுமின்றித் தீமை மிக்கதாகக் கொடும் நஞ்சாக மக்களிடையே வளர்ந்து வந்திருக்கிறது.

பலப்பல பெயரிலே, பலப்பல கற்பனைகளிலே உருவெடுத்து, மக்கள் உள்ளத்தை மயக்கித் தன்பால் 'மீளாத அடிமைக'ளாக்கி விட்டிருக்கிறது மதம்.

மதம் என்றைக்கும் மனித வாழ்க்கைக்கு, மனித முற்போக்குக்கு மனித அறிவு வளர்ச்சிக்கு ஒரு தடைக் கல்லாகவே இருந்து வந்திருக்கிறது. இயேசு பிறப்பதற்கு முன்னும், இயேசு இறந்த பின்னும், இயேசு வாழ்ந்த போதும் கூட இயேசுவின் கொள்கையை மதம் ஏற்கவில்லை. இதை எவரும் மறுக்க முடியாது. இயேசுவுக்கு முன்னிருந்த மதமும், அந்தக் காலமுமே நாகரிகப் பண்பு ஏற்படாத காலம். இயேசுவை மதம் பாடுபடுத்திக் கொன்றிருக்கிறது. இயேசுவிற்குப் பின்னுள்ள மதம் இயேசு சொற்படி நடக்கவில்லை. இதை நாம் நேரே காண்கிறோம். எனவே இயேசுவால் மதத்தில் ஒரு மாற்றமும் இல்லை; இயேசுவின் பெயரை ஏற்றுக்கொண்டது ஒன்று தவிர. எனவே தான் மனிதனை மதம் விலங்காக்குகிறது, அடிமைப்படுத்துகிறது என்கிறோம். அடிமைப்படாதவனை, அடிமைப்பட மறுக்கும் சிந்தனைக்காரனை, அவன் கருத்துக்களை அழிக்க முயல்கிறதைப் பார்க்கிறோம். தான் சிந்திக்கிற ஒரு நல்ல நெறிவழிப் போக விடாமல், மடமையைக் கைப்பிடித்த மக்கள் கூட்டத்தின் மூடக்கொள்கைகளின் வழியே சிந்தனைக்காரனையும் இழுத்துச்சென்று சிதைக்கிறது.

மதம் முதன் முதலில் நம்பிக்கைவேண்டும் என்று சொல்லுகிறது. பிறகுதான் தன் கொள்கையைச்சொல்லுகிறது. இதைவிட அடிமைத்தனம் வேறு என்ன இருக்கிறது? எதையும் ஆராய்ந்து பார்த்து அதன் பிறகு நம்புகின்ற அறிவின் வளர்ச்சியைத் தடைசெய்துவிடுகின்ற மதம் மூடத்தனத்தின முழு உருவம் என்றால் அது சற்றும் மிகையல்ல. இன்னும் மதம் என்னென்ன சொல்லுகிறது? உலகப்பற்றை விடச் சொல்லுகிறது, ஆனால் அது இயலாத காரியமாயிற்றே என்று உணர்ந்த பிறகு அடுத்த உலகம் ஒன்றைக் கற்பித்து, அங்கு பேரின்பத்தையும் வைத்து, அதிலே பற்றைத் திருப்பிவிட்டு உலகப் பற்றறுக்குமாறு மக்களுக்குக் கற்பித்துவிட்டது. இது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கச் சொல்லுவதல்லாமல் வேறு என்னவாயிருக்கமுடியும்? இன்னும் கொச்சையாகச் சொன்னால், அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதை என்றுதானே சொல்ல வேண்டும்?

“மதத்திலே தீமையிருக்கலாம். அதைக் களைந்து நன்

மையைக் கொள்க! நலமுறுக! என்று சொல்லுகிறார்கள் மதத்தைத் தூக்கி நிறுத்த முயற்சிப்பவர்கள். மதம் ஏதாவது நன்மையான செயலை ஆதரிக்கிறதா? புத்தர், ஏசு, மகமது முதலியோர் சொல்லிலே சில நன்னெறி மொழிகள் இருக்கலாம். ஆனால் அவர்கள் மொழியைத்தான் மதம் பின்பற்றவில்லையே! இன்னும் மதவாதிகள் சொல்லுகிறார்கள் 'மதங்கள் பலவாயினும் நாடுவது ஒரு பொருளே' என்று. அப்படியானால் மதப்பிரசாரமும், மதமாற்றமும், மதச்சண்டைகளும் ஏற்படக்காரணமில்லையே? 'எல்லோரும் கடவுளின் மக்கள்' என்று சொல்லும் மதத்தில் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையிலே பாதிரியோ, குருக்களோ தேவையில்லையே!

கடைசியாக இந்த மதம் மக்களுக்குச் செய்த நன்மைதான் என்ன என்றால் பதில் சொல்ல முடியாத நிலையில், அது கற்பனையில் பிறந்து, கற்பனையில் வாழ்ந்து, கற்பனையை மக்களுக்குக் காட்டிக் கருத்தை இழுத்துக் கற்பனைக் கதைகளிலே மக்களுக்குக் கற்பனை இன்பம் நல்குகிறதே தவிர உண்மை இன்பத்தையும் எதிர்க்கிறதே!

எனவே ஒரு பயனுமற்ற, தீமையே உருவான மதத்தை ஒழித்துக் கட்ட வேண்டும். சீர்திருத்த முயல்வது வீண் முயற்சியாகவே முடியும். இதுவரை சீர்திருத்த முயன்றவர்களின் பெயராலேயே அவர்கள் கருத்துக்குச் சமாதி கட்டும் மதம் அழியத்தான் வேண்டும்.

'மதம்' என்ற சொல்கூட இல்லாமல் ஒழிய வேண்டும். அப்பொழுதுதான் உலகம் உண்மையான இன்பத்தைக் காணும். ●

தூத்துக்குடி எதிரொலி!

"என்ன தோழரே உங்கள் கருப்புச் சட்டை வெளுத்துக் கொண்டே வருகிறது! உங்களுக்கு உணர்ச்சி குன்றி விட்டதோ?"

"இல்லை தோழரே! எங்கள் ஊரில் இழிவு நீங்கிக் கொண்டே வருகிறது! அதனால் தான்!"

★

"புல்லேந்தும் கையினர் வாளேந்தப் போகிறார்கள் தெரியுமா? கேடயம் தயார் செய்து கொள்ளுங்கள்!"

"கேடயமெதற்குத் தோழரே! அவர்கள் கத்தி எடுக்கப் போவது பூணூலை அறுத்தெறிய! இதுதெரியாமல் பேசுகின்றீரே!"

★

"இந்த மாடு கருப்புச் சட்டையைக் கண்டு இப்படி அதிகமாக மிரளுகிறதே! ஏன்?"

"அது 'சுப்பராயன் பிராண்ட்' மாடு. அது அப்படித்தான் மிரளும்"

★

"தூத்துக்குடியிலே ஒரே காக்காக் கூட்டமாமே?"

"ஆமாம்! அது பெருச்சாளிகளுக்கு அபாய அறிவிப்புத்தானே"

★

"ரயிலிலே மூட்டைப்பூச்சி அதிகமாயிருக்கின்றதே?"

"அது ஆரியத்தைப் போன்றது! எங்கும் நுழைந்து யாவருடைய ரத்தத்தையும் உறிஞ்சும்!"

—மா. சுந்தரமூர்த்தி

பேசும்

பிணங்கள்

"இளமைப்பித்தன்"

மாலை நேரத்தின் மஞ்சள் வெயில்!

நகரின் பல பாகங்கள் முலாம் பூசிக்கொண்டன. சூதும் வஞ்சனையும் சூழ்ந்த மனித சமுதாயத்தில் ஒரு புரட்சி தரும் வேளை. வீதியிலிருக்கும் மின்சார விளக்குகள், வெய்யோன் வீழும் வேளையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தன!

நிறம் மாறியது!

மஞ்சளின் மேலொளி மறைந்து, வானத்தில் கருநீலம் பூத்துப் படர்ந்தது. விண்மீன்களைப்போல், மின் விளக்குகள் எங்கு பார்த்தாலும் ஒளி சிந்தி மினு மினுக்க ஆரம்பித்தன. நாகரிகத்தின் வேகநடை தளர்ந்து அநாகரிகத்தின் கோணல்மாணலான தாள்கள் நெளிந்து வளையும் வேளை வந்தது!

ஒரு குறுகலான நீண்ட வீதி!

சமுதாயத்தின் அழுகலான பாகம்! வீதியின் இரு மருங்கிலும் 'விற்பனைச் சரக்குகள்' நிரம்பிய வீடுகள்; காமக் கிடங்குகள். வானவில்லின் ஒளிப் பாளங்களைத் துண்டு, துண்டாக்கித் தெளித்ததைப் போன்ற 'வர்ண ஜாலங்கள்'!

முனை வீட்டின் வாசலில் ஒரு பெண்!

வயிற்றிற்காக மானத்தை, உடலை, உணர்ச்சியை, வாழ்க்கையை விற்பனை செய்யக் காத்துக் கொண்டிருந்தாள்; விலை கூறிக் கொண்டிருந்தாள்!

வேளை வரவில்லை!

ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் இதேபோன்ற அவமானச் சின்னங்கள் அழகுப் போர்வையுடன் அலங்கரிக்கப்பட்டிருந்தன! நாழியாக, ஆக ஜன சந்தடி ஒய்ந்துகொண்டே வந்தது! அவள் திரும்பித் திரும்பிப் பார்த்தாள்; பணப்பசி பிடித்த அவளுடைய கண்களால் வீதியைத் துழாவித் துழாவிப் பார்த்தாள்!

"கொர்-ர்-ர்-ர்ர்ர்!"

சப்தம் அருகில்தான் கேட்டது! தெரு விளக்கின் கம்பத்தின் கீழ் ஒரு மெலிந்த மனிதன் சுருண்டு கிடந்தான்; விளக்கொளியில் அவனுடைய பழுப்பேறிக் குழி விழுந்த விழிகள் மங்கலாகச் சுழித்துக் கிடந்தன! உடல் முழுவதும் கொடிய புற்று நோய் குடியேறி இருந்தது. இருமினான்; பலமாக! பதைபதைக்கும் விதமாக!

அது அவளுக்குக் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட குரல் தான். திரும்பிப் பார்த்தாள்! அவளுடையமுன்னாள் 'ஆசைக்

காதலன்' விளக்குக் சம்பத்தி லடியில் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருந்தான்! மரணம் அவனை நாளுக்கு நாள் விழுங்கிக் கொண்டிருந்தது!

அவன் ஈளைகட்டிய கரகரப்பான குரலில் "ஏதாவது பணம் கெடச்சுதா?" என்று கேட்டான்.

"சும்மா கெட! பணம், பணம்னு பிராணனை வாங்காதே" என்றுள் கோபம் கொழுந்துவிட!

மீண்டும் 'கொர்-ர்-ர்ர்' என்ற சப்தம் வலுவாகக் கேட்டது! அவன் சுருட்டி முடக்கிக் கொண்டு படுத்து விட்டான்!

பார்வையைத் திருப்பினாள் அவள்!

தூரத்தில் யாரோ ஒருவன் வந்து கொண்டிருந்தான். தொழிலாளியின் மனத்தில் மின்னி, மின்னி மறையும் இன்பத்தைப் போலத் தெரு விளக்குகளின் ஒளி அவன் மீது தெறித்துத் தெறித்து மறைந்தது! அதைக் கண்டதும் முனை வீட்டுக் காரியின், அகத்திலும் முகத்திலும் வேட்டையாடும் 'விபரீத ஆசை' ரேகை விட்டது! அவன் அருகில் வந்து விட்டான்; அவனை—

அவள் கூப்பிட்டாள்; இல்லை; வறுமை கூவியழைத்தது! குடலின் கொந்தளிப்பு குரல் கொடுத்தது!

அவன் சிரித்த முகத்துடன் உள்ளே நுழைந்தான்! இருவரும் உள்ளே போய் விட்டார்கள்! தெருவில் கிடக்கும் புற்று நோய்க்காரன் மீண்டும் பயங்கரமாக இருமினான்! அசங்கியமான அருவருப்பான குரலில் இருமினான். உள்ளே போனவனுக்கு அந்த அபாயத்தின் எச்சரிக்கை காதில் விழவில்லை! கதவு தான் மூடிக்கொண்டு விட்டதே!

கதவுக்குப் பின்னால்—!

சுவற்றில் நீல நிற விளக்கு எரிந்து கொண்டிருந்தது, அவள் முகத்தில் கீறியிருந்த சுருக்கங்களை மறைப்பதற்காக! கண்ணாடிக் கோப்பைகளும், கை வளையல்களும் ஒலி செய்தன!

சிறிது நேரம் அமைதி; சுடு காட்டு அமைதி!

பிறகு சிரிப்பின் சப்தம்!

ஆம்! சமூகத்தின் 'நடமாடும் பிணங்கள்' சிரித்தன! ஆபாச வாழ்வின் பிலாக்கணம், சவக் கிடங்கின் சங்கீதமாக அங்கே சூழ்ந்தது! பிணங்கள் பேசின!

"ஏய்! கிட்டவந்து உக்காரு!"

"ரொம்ப அதிகாரம் பண்ணாதே, ராசா!"

"பணம் ஒரு ரூவாடி, தெரியுமா?"

"அதுக்குள்ள அதிகாரம் கொரச்சுத்தான்"

"அடேயப்பா! கோவிச்சுக்கிறியே!"

"இன்னும் ஒரு ரூவா கூடக் கொடுத்தீன்னா கொஞ்சிப் பேசுவேன், நீதான் பணத்தைக் கொறச்சிட்டியே!"

"பூ! நேத்திக்கு எட்டணாவுக்கு ஒரு பொண்ணு கெடச்சுது; பேச்சுன்னாப் பேச்சு. கிளி மாதிரி, அப்புறம் நானா மனசு வெச்சு நாலணா கூடக் குடுத்தேன்!"

"அவ கெடக்கிரு! வெலேக் குத் தகுந்தாப்போலத்தானே சாமானும் இருக்கும்!"

"சரி, நேரமாவுதே!"

அவன், அவளே அருகில் இழுத்தான்! மரக்கட்டை மாதிரி போய் உராசினுள் அவன் மேல்! மனிதன் விலங் காக உருவெடுத்து மாறினன். உணர்ச்சியின் உச்சாணிக் கிளே யில் 'வெறி' கால்களேப் பலங் கொண்ட மட்டும் ஊன்றித் தாவி விட்டான்! சிறிது நேரத் தில் அவன் அவளிடம் கொடுத்த ஒரு ரூபாய் நாணயம் தேய்ந்து மறைந்து விட்டது!

அவள் முனக ஆரம்பித் தாள்! தடுமாறித் தத்தளித் துக் கொண்டு வெளியேறிய மூச்சுக் காற்று, காற்ருேடு காற்ருய்க் கலந்து மறைந்தது!

அவன் 'வெறி' தணிந்துவிட் டது! விழிகள் மேலேறிச் செருகி இருந்தன! களேத்துப் போய்க் கயிற்றுக் கட்டிலின் மேல் வந்து படுத்தான்!

அவள்?

அந்த உத்தமனுக்கு, அன் றைய வறுமையைப் போக்க டித்த அனுதை இரட்சகனுக்கு விசிறிக் கொண்டிருந்தாள்! களேப்போ, அலுப்போ, கொஞ் சங்கூட இல்லாமல்! தினசரி வாழும் வாழ்க்கையில் அரைப் பாகம் முடிவடைந்தது!

குறுக்கும் நெடுக்குமாகக் குழைந்த காற்று அவன் களேப் பைத் தீர்த்தது! அவள் முகத்தை எறிட்டுப் பார்த் தான்! சவத்தின் சாயை அதில் படிந்து போயிருந்தது! வெறி யேறி எக்களித்துக் கொண்டி ருந்த அவன் மனத்தில் கண நேரம் விரக்தி வெறியாட்டம் போட்டது! அந்த இடத்தை விட்டு வெளியேறினுன், இடுப் பின் மேல் இரு கைகளேயும் ஊன்றியபடி!

"கொர்-ர்ர்ர்-ர்"

தெருவில் கிடந்தவன் இரு மினுன்! சாவின் சிரிப்பைப் போல இருந்தது அந்தச் சிரிப் பின் ஓசை! எழுந்தான்! தள் ளாடினுன்; நடந்தான்! புற்று நோயால் புழுத்துப் போயிருந்த அவனுடைய உடலிலிருந்து சீழ் வடிந்து சொட்ட ஆரம்பித் தது!

அவளிடம் போய் நின்ருன்!

"எவ்வளவு பணம் கெடச் சுது?"

விகாரமான குரலில் கேள்வி பிறந்தது!

பதில் இல்லே! புடவைத் தலேப்பால் முகத்தை மூடிக் கொண்டாள் அவள்!

"பணம் கொடு; பணம்! பணம் வேணும் எனக்கு" என்று அவளிடம் நெருங் கினுன்! ஒரு ரூபாய் நாண யத்தை எடுத்து அவனிடம் விசி எறிந்தாள்! அதைப் பெற்றுக்கொண்டு திரும்பினுன் அவன்! "கொர்-ர்-ர்ர்ர்!" இருமல் சப்தம் மெள்ள, மெள்ள ஒலித்துக் கொண்டே இருளுடன் கலந்து மறைந் தது!

"கடவுளே!" என்ருள் தின மான குரலில். பேசும் பிணத் தின் கூக்குரல், பேசாப் பிணத் தின் காதிலா விழப்போகிறது? அங்கே எதிரொலி கூடக் கேட்கவில்லே!

வயலோரத்திலே!

"ஒளிப்புழகன்"

ஓரங்களிலே ஆற்றோரம், சாலை யோரம்—இவற்றிலே வந்த வம்பை விட வயலோரத்திலே வந்த வம்பு வாழ்ந்த குடும்பத்தைப் பாதை யோரத்திலே விழச் செய்தது—விழச் செய்தது மட்டுமல்ல! விழச் செய்து கொண்டிருப்பதும் அன்றாட வரலாறு.

ஃ ஃ ஃ

அதோ போகின்றனவே இரண்டு எலும்புக் கூடுகள்! கண்ணுக்குத் தெரிகிறதா? உல்லாசக் கண்ணாடி அணிந்துள்ள கனவான்களின் கண்ணுக்கு அந்த எலும்புக் கூடுகளின் அசைவைப்பற்றி எங்கே தெரியப் போகிறது? எப்படித் தெரிய முடியும்? நாம் நடமாடும்போது ஊர்ந்து செல்லும் எலும்புக் கூட்டங்களைப் பார்த்துக் கொண்டா போகிறோம்! அதே மாதிரிதான் உல்லாச புரியிலே உலவிக் கொண்டிருக்கும் உலுத்தர்களுக்கு ஊர்ந்து செல்லும் அந்த எலும்புக் கூடுகளைப்பற்றி எப்படித் தெரிய முடியும்?

உல்லாசக் கண்ணாடியை உதறித் தள்ளிவிட்டு உற்றுப் பார்! அந்த இரண்டு எலும்புக் கூடுகளைத் தெரிகிறதா? எங்கேயோ ஓர் வயலோரத்திலே பார்த்த மாதிரி தெரிகிறதா? ஆம்! அன்று வயலோரத்திலே பாடுபட்ட குடும்பம் வீடில்லாமல் கூடாக நடமாடுகிறது...... இல்லை...... இல்லை...... எங்கே நடமாடுகிறது? எப்படி நடமாட முடியும்?—அந்த எலும்புக்கூடு களைக் காற்று அல்லவோ அடித்துக்கொண்டு, நகர்த்திக் கொண்டு செல்கிறது. அதோ அண்ணாந்து பார்! அதே காற்று அந்த ஐந்து அடுக்கு அரண்மனையிலேயுள்ள காதலர்களை இன்புறுத்துகிறது. இயற்கை இரண்டு உலகத்திற்கும் உதவியளிக்கிறது! காற்றால் அடித்துக் கொண்டு செல்லப்பட்ட எலும்புக் கூடுகள் பாதையோரத்திலே நகர்ந்தன, அல்ல, ஊசலாடின ... இல்லை ......இல்லை......அதோ பாதையோரத்திலே ஊசலாடிய எலும்புக் கூடுகள் நடுப்பாதையிலே வீழ்ந்து விட்டனவே!

"விர்" என்ற சத்தம்.

"பூம் பாம்" என்ற இடி

ஆம்! "சடக்"என்று வந்தது ஓர் மோட்டார்.

"முடக்" என்று முறிந்தன எலும்புக் கூடுகள்.

அந்தக் கூடுகள் பாதை யோரத்திலே உள்ள பத்திர காளியைப் பார்த்துச்சிரித்தன! பத்திரகாளியும் சிரித்தாள்!!

எலும்புக்கூடுகளின் சிரிப்பில் "ஏ, நாதியற்ற காளியே! இந்த

மோட்டார் எங்களைக் கொல்ல வில்லை. எங்களை இது கொல்வதற்கு எங்கள் உடலில்...... இல்லை...எங்கள் எலும்புக் கூடுகளில் உயிர் எது? எங்கள் உயிர் தான் அன்று வயலோரத்திலேயே உறிஞ்சப் பட்டுவிட்டதே! ஏ, பட்டாடை அணிந்துள்ள பத்திரகாளியே! சாலையோரத்திலே சாக வில்லையடி நாங்கள். வயலோரத்திலேயே செத்து விட்டோம். சத்தெல்லாம் அந்தப் பொன் விளைந்த வயலிலே கொடுத்து விட்டுச் செத்து விட்டோமடி!" என்று வெளிவந்தன சில சொற்கள்.

∴ ∴ ∴

ஆம்! வயலோரம். அந்த ஓரத்திலே வந்த வம்பு வீரனையும் வீராயியையும் விடில்லாமல் கூடுகளாக ஆக்கியது. அது மட்டுமல்ல! வயலோரத்தின் இன்பத்தில் விளைந்த ஓர் பச்சிளங் குழந்தையைப் பாதி வழியிலேயே பறிகொடுத்தாகி விட்டது. அக்கூடுகளின் பரிதாப வரலாற்றைக் காணுங்கள்!

∴ ∴ ∴

ஓர் இரவு. இடியும் மின்னலும் சேர்ந்த மழை. "அர்ச்சுனு! அர்ச்சுனு!!" என்று அலறுகிறாள் ஆண்டையின் மனைவி அலமு! "ஆண்டவனே! ஆண்டவனே!! இந்த இடியா ஒரு பெரிய இடி? நான் என்ன ஆண்டையிடம் வாங்கும் இடியை விடவா இந்த இடி பெரிது" என்று தனக்குள் கூறிச் சஞ்சலப் படுகிறான் ஆண்டையின் அடிமை வீரன்! ஆம்! அன்றுமாலை வீரனுடைய ஆண்டை அடித்த மின்னல் போன்ற அடியும், இடியைப் போன்ற வசையும் வீரனின் கண்களிலிருந்து மழைபோன்ற கண்ணீரைப் பொழியச் செய்தன! அவன் கண்களிலிருந்து கிளம்பிய கண்ணீரும் வானிலிருந்து அவன் குடிசைக்குள் வீழ்ந்த மழை நீரும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டு ஆறுதல் அடைந்தன.

அவன் குடிசையில் மழைநீர் கணுக்கால்வரையிலே உயர்ந்து இருந்ததைக்கண்டு சஞ்சலமடைகிறான். அதே நேரத்திலே அவனுடைய ஆண்டை தன் வயலிலேமழைநீர் பயிர்களைப் பாழ் செய்யுமே என்று சஞ்சலமடைகிறான். காமிராவில் தூங்கும் தன்மகள் கலகாம்பரத்தை எழுப்பி "காஷ்மீர் ஷாலை" போர்த்திக் கொள்ளடி என்று கடிந்துரைக்கிறாள் அலமு. அந்த நேரத்திலே வெளியே கடனாக அரிசி வாங்கி வருவதாகக் கூறிச்சென்ற தன் மனைவி எங்கே மழையில் நனைகிறாளோ என்று ஏங்கிக்கிடக்கும் வீரன் தன்னுடைய குழந்தையைக் குடிசையிலே போட வகையில்லையே என்று தன் கையையே அதற்கு மஞ்சமாகவும் தன்னுடைய ஆடையில்லா மார்பையே அதற்கு "காஷ்மிர் ஷாலா"வாகவும் கட்டி அணைத்துக் கொண்டு தன் குழந்தையின் மதிமுகத்தைக் கண்டு அந்தத் துன்பத்திலும் இன்பத்தைத் துய்த்தான்.

பெருமழை நின்றது தவிட்டுத் தூற்றல். மின்னலும் இடியும் நின்றபாடில்லை. குடிசையிலே குழந்தையுடன் குந்தியிருக்கும் வீரன் தன் மனைவியின் வரவை எதிர்பார்த்துக்

கொண்டிருக்கும் நேரம். மழை யினுல் அழியும் விளைச்சலைக் காணப் புறப்படுகிருர் ஆண்டை.

அவருடைய தலையோ மொட்டை. அவர் பிறரை அடிப்பதும் மொட்டைதான். அவர் காலில் அணிந்திருப்பதோ மரக்கட்டை. அவருடைய மனமும் மரக்கட்டைதான். அவர் நெற்றியிலோ விபூதிப் பட்டை. ஆனுல் அவர் பாடுவது "நாராயணு கோவிந்தா" என்ற பாட்டை. அவர் பிடித்திருக்கும் குடையோ ஓட்டை. இதுதான் அவரைப் பிறரறியக் கூறும் சுருங்கிய வர்ணிப்பு.

அவர் செல்லும் பாட்டையோடு நாமும் செல்வோம். அவர் வீதிப்பாட்டையைக் கடந்து வரப்புப் பாட்டையை அடைந்தார். தன் வயலோரம் வந்தடைந்தார். "சர்"ரென்ற உரசல் கேட்டது. பாம்போ என்று பயந்து தன் "பாட்டரி" விளக்கை ஏற்றினுர். அது மின்னலைப் பழித்தது! சரியாக வேலை செய்யவில்லை. ஆனுல் அந்த மங்கலான வெளிச்சத்தில் ஓர் கரிய உருவம் நிற்கக் கண்டார். "யாரது" என்ற அதிகாரக் குரலுடன் கொஞ்சம் திகில் கொண்டு கேட்டார். அந்த நேரத்திலே அந்த உருவத்தைத் தெளிவாகக் காட்ட வேண்டி மறைந்து கிடந்த முழுமதி வானைக்கிழித்துக்கொண்டு வெளிக் கிளம்பிற்று. அம் முழுமதி பொழியும் நிலவில் மற்ருெரு முழுமதியோவென ஓர் பெண்ணுருவம் வரப்பின் ஓரத்திலே உருவிய கதிருடன் நடுங்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தது. ஆண்டை அவளுடைய மதிமுகத்தை முதலில் கண்டார். பின் உருவிய கதிர்களையும் கண்டார். கனவான் கதிகலங்கிஞரில்லை. அவர் கனவானுக இருந்தால் அந்த இடத்திலே கதிகலங்கி இருப்பார். அவர் அந்த இடத்திலே காமுகனுக இருந்ததினுல்தான் தன்னுடைய மணிக்கதிர்களை உருவிய உருவத்தை மதிமுகம் எனக்கண்டார். அவள் தன்னுடைய மணிக்கதிர்களை மாத்திரம் உருவவில்லை; தன்னுடைய மனத்தையே உருவிவிட்டாள் என்பதாகக் கற்பனை செய்து கொண்டார்.

"நீயா வீராயி?" என்று காமங் கலந்த குரலில் அழைத்தார். "கஞ்சிக்கு வழியில்லையே என்று..........." என்று நடுங்கிய வீராயி ஒடுங்கியபடி இழுத்தாள்.

"கஞ்சிக் கென்னடி வஞ்சி! கொஞ்சி விளையாடலாம் வா" என்ருர் கனவான் கவிவாணர் தோரணையில்! அன்று திருப்புகழ் விரிவுரையாளர் கற்பித்த பாடம் அது!! "வஞ்சகி" என்று கூறவேண்டியவர் "வஞ்சி" என்று கொஞ்சி யழைத்தார். ஆம்! காமம் அவ்வளவு கொடிது! களத்தோரத்திலே 'எட்டி நில்லடி எட்டடி!' என்று ஏவலிடும் எசமானர் நல்ல குட்டியாக இருந்தால் 'கொஞ்சிக் குலவ வாடி' என்கிருர் வயலோரத்திலே. அவளை இருட்டுலகத்தில் கொஞ்சிக் குலாவச் சமுதாயம் இடம் கொடுக்கிறது. பட்டப் பகலிலே பலபேர் அறியத் திருமணம்......இல்லை! அதைத் திருமணம் என்ரு சமுதாயம்

அழைக்கிறது, அப்படிச் சமுதாயத்தை எதிர்த்துத் திருமணம் செய்து கொண்டாலோ "அவள் வைப்பாட்டி-விபசாரி-சமுதாயத்திலே நெளியும்புழு!" என்று கருதப்படுகிருள். ஆனால் வீராயிக்குக் கட்டிய ஓர் பாட்டாளி இருக்க எசமானையும் ஓர் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்வதா? கஞ்சிக்கு வழியில்லையேஎன்று கதிர்களை உருவிய குற்றத்திற்காகக் கொஞ்சி விளையாடுவதா ஓர் உலுத்தனுடு. "வஞ்சி கொஞ்சி விளையாடலாம் வா" என்று அழைத்த வஞ்சகன் அழைத்ததோடு மட்டுமல்ல, அவளை அணைத்துத் தழுவ அணுகினுன்.

"இச்"சென்ற முத்தமிடும் சத்தம். வயற்காட்டு எலி சரேலென்று ஓடியது. வீராயியும் ஓடி மறைந்தாள். முழு மதியும் ஓடி மறைந்தது கார்மேகத்தினிடையே! அணிலேற விட்ட நாய்போல எண்ணி ஏமாந்தார் எசமானர். அந்த ஏமாற்றந்தான் வீரனையும் வீராயியையும் குடிசையை விட்டுத் துரத்தியது. அந்த வயலோர வம்புதான் வாழ்ந்த பாட்டாளிக் குடும்பத்தைப் பாதையோரத்திலே எலும்புக்கூடாகத் திரிய வைத்தது. அந்த எலும்புக் கூடுகள்தான் ஏன் உலகில் நடமாடுகின்றன என்று "சடக்" என்று வந்தமோட்டார்"முடக்" என்று முறித்துச் சென்றது.

ஆம்! வயலோரத்திலே உறிஞ்சப்பட்டது உயிர்! பாதையோரத்திலே முறிக்கப்பட்டது எலும்புக்கூடு மட்டுமே!!

●

ஆணும் பெண்ணும்

ச. பொருட்செல்வி

எந்த அலுவலிலும் பெண்களுக்கு இடமில்லை என்று ஒதுக்கப்பட்டுள்ள நிலை இந்த நாட்டிற்குப் பெரிய மானக்கேடாகும். பல் டாக்டர்களாகவும் கல்லூரிப் பேராசிரியர்களாகவும், விரிவுரை யாளர்களாகவும் பெண்கள் வர இடமில்லை இந்த நாட்டில்!

இந்த நிலை நீடிக்காமலிருக்க ஒவ்வொரு பெண்ணும் படித்துப் பட்டம்பெற்று எல்லாவிதமான அலுவலகங்களையும் கைப்பற்றிக் கொள்ளவேண்டும். ஆடவர்கள் எந்தப்பக்கம் திரும்பினுலும் பெண்கள் புத்தி கூர்மையுடன் சுறுசுறுப்பாகத் தொண்டாற்றும் நிலையைக் காணவேண்டும்.

பெண்கள் பலதுறைகளிலும் முன்னேறக் கண்டால் மனதில் எழும் பொருமை உணர்வால் இன்றைய ஆண்கள் - சர்க்கார் தடையுத்தரவு போட்டாலும் போடுவார்கள்.

பெண்கள் முன்னேற்றத்தில் தான் உண்மையான சமதர்மம் நாட்டில் நிலவ முடியும். பணக்காரனுக்கு ஏழை தாழ்வென்பதும், பார்ப்பானுக்குத் திராவிடன் தாழ்வென்பதும் ஒழிவது போல, ஆணுக்குப் பெண் தாழ்வென்னும் மனப்பான்மையும் அழிக்கப்பட வேண்டும்.

●

“தெய்வத் தமிழ்!”

பழ. சுப்பிரமணியன்

> ‘தெய்வத் தமிழ்’ என்று கூறுபவர் தமிழுக்குப் பெருமை தேடுவதாக எண்ணுகின்றனர்; ஆனால் அது தமிழுக்கு இழுக்காக முடிந்து போவதைக் கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

“தொன்மை பொருந்திய நமது தமிழ்மொழி கண்ணுதற் பெருங்கடவுளால் படைக்கப்பட்டது, தெய்வத் தன்மை பொருந்தியது” என்று சிலர் பெருமிதம் தோன்றப் பேசியும் எழுதியும் வருகின்றனர். ‘தெய்வத்தமிழ் நாட்டினிலே’ என்று தொடங்கும் பாட்டொன்று ஒலிப்பதிவுகூடச் செய்யப்பட்டுள்ளது. தெய்வத்தமிழ் என்ற சொல்லைப் பயன்படுத்துபவருள் இருசாரார் உண்டு. தமிழ், தமிழ்நாடு என்று பேசுவது மக்கள் மனத்தைக் கவரும் தன்மையது என்பதையறிந்து சுயநலத்திற்காகவும் தமிழின் நலிவிற்காகவும் அச்சொல்லைப் பயன்படுத்துபவர் ஒருசாரார். தமிழ் கண்ணுதற் பெருங்கடவுளால் உண்மையாகவே படைக்கப் பட்டது என்று நம்புவோர் மற்றோர் சாரார். இப்பிரிவினர் தெய்வத் தமிழ் என்று சொல்லுவதின் மூலம் தமிழின் பெருமையைப் புலப்படுத்துவதாகவே எண்ணுகின்றனர். அவர்தம் நோக்கம் நல்லதாயினும் செய்யும் முறை செம்மையானதல்ல, நாட்டைச் சீரழிப்பது.

“தமிழ் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பதற்கு என்ன ஆதாரம்? அது எந்த வகையில் தெய்வத் தன்மை பொருந்தியது? கடவுள் இல்லையென்பவர் தமிழைப்படிக்கக் கூடாதா? மற்ற மொழிகளெல்லாம் யாரால் படைக்கப்பட்டன?” ஆகிய வினாக்கள் நம் மனத்தே எழுகின்றன. மற்ற மொழிகளையும் கடவுள் படைத்தாரென்றால் நாம் ஏன் எல்லா மொழிகளுக்கும் பொதுவான ஒன்றை நம்மொழியின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகக் கூறவேண்டும்? மற்ற மொழிகளைக் கடவுள் படைக்கவில்லையென்றால் அதன் மூலம் அவர் பாரபட்சமுடையவர் என்றாகி விடும். அவ்வாறு விருப்பு, வெறுப்பு ஆகியவற்றிற்கு அடிமையான ஒருவர் நம் மொழியைப் படைத்தார் என்று சொல்லிக்கொள்வதன் மூலம் நம் மொழிக்கு இழிவுதான் உண்டாகும். எனவே கடவுள் தமிழைப் படைத்திருக்க முடியாது என ஆகின்றது.

ஆதிகாலத்து மனிதன் தன் இனத்தாருக்குத் தன் உணர்ச்சிகளையும் விருப்பு, வெறுப்பு ஆகியவற்றையும் முதலில் உடல் உறுப்புக்களின் சைகைகளால் தெரிவித்து வந்தான்,

அதன் பின்பு வாய் மூலமான கூக்குரல்களினால் தெரிவித்து வந்தான். நாளடைவில் அவனும் அவனுடைய இனத்தவரும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு குறிப்பிட்ட சொல்லையே பயன்படுத்தி வந்தனர். அச் சொற்கள் ஒரு நெறிப்பட்டுச் சொற்றொடராய் அமையும் நிலை வந்த பிறகு தான் மொழி உண்டாயிற்று. மொழி சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்த பிறகு மனிதன் மொழிக்கு இலக்கணம் வகுத்தான். இவ்வாறு தான் ஒரு மொழி தோன்றியிருக்க வேண்டும் என்பது மொழியறிஞரின் முடிபாகும். இதற்கு மாறாகக் கடவுள் ஒரு மொழியைப் படைத்தார் என்று சொல்வது சொல்லுபவரின் அறியாமையையே காட்டுகின்றது.

தமிழை இறைவன் உண்டாக்கினார் என்பதோ, தமிழ் தெய்வத் தன்மை பொருந்தியது என்பதோ பிறமொழியினர் நம்மைப் பார்த்து "இவர்கட்குப் பெருமையாய்ச் சொல்லிக் கொள்ள ஒன்றும் கிடையாது. எனவே தான் இவர் தம் மொழி தெய்வத் தன்மை பொருந்தியது எனச் சாற்றுகின்றனர்" என்று கூறி நகைத்தற்குத்தான் ஏதுவாகும். எனவே இவ்வாறு தமிழைப் பெருமைப்படுத்த நினைப்பவர் அறிந்தோ, அறியாமலோ தமிழுக்கு இழுவே தேடுகின்றனர்.

பொதுவாக, இன்று நம் மொழியின் நிலையை எண்ணிப் பார்க்குங்கால் மொழியின் பெருமையை மட்டும் பேசிப் பயனில்லை என்பதை உணரலாம். எத்துறையிலும் தமிழ் நாட்டில் பிறமொழியின் ஆதிக்கம், ஒரு சிலர் தமிழில் சொற்களில்லை என்று கூறிப் பிறமொழிச் சொற்களைத் தமிழில் புகுத்த நினைக்கும் சூழ்ச்சி, இப்பொழுது தமிழுக்கு இருக்கும் ஓரளவு சிறப்பையும் குறைக்கக்கூடிய அளவுக்கு இந்தியைப் புகுத்தும் ஏற்பாடு ஆகியவற்றிடையே தமிழ் இன்று ஊசலாடுகிறது. ஒரு சிலர் தமிழ் தமிழ் நாடு என்று சொல்லிக்கொண்டே தமிழ்ப் போர்வையில் தமிழை ஈடழிக்க முற்பட்டிருக்கின்றனர். இந்நிலையில் நாம் இச்செயல்களைத் தடுக்க முற்படாது பெருமை பேசுவதில் பயனேயில்லை. மேலும் இறைவனால் உண்டாக்கப்பட்ட தமிழ் இன்று இந்நிலையில் இருப்பானேன் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் நாட்டு எழுத்தாளர்களே, சொற்பொழிவாளர்களே, பழம் பெருமை பேசுவது பயனற்றது என்பதை உணருங்கள். அவ்வாறு தமிழின் பெருமையை எடுத்துக் கூற நினைத்தாலும் தெய்வத் தமிழ் என்று கூறித் தமிழுக்கு இழிவை உண்டாக்காதீர்கள். "என்றும் இளமை குன்றாது இலங்கும் கன்னித்தமிழ்" என்று கூறுங்கள். "இலக்கண இலக்கியச் சிறப்பமைந்த தமிழ்" என்று கூறுங்கள். இயற்கையோடு இயைந்த தமிழ்" என்று கூறுங்கள். "பேரெதிர்ப்பாலும் பிறர் சூழ்ச்சியாலும் அழியாத செந்தமிழ்" என்று கூறுங்கள். இதுவே உங்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்.

●



பாரதிதாசன் பரம்பரை

[ஆர்வமும் ஆற்றலும் நிறைந்த இளைஞர் திரு. சு. வழித்துணைராமன் அவர்கள் பாரதிதாசன் பரம்பரையினர். தூத்துக்குடி அவர் தம் சொந்த ஊர். ஆறு பற்றிய கற்பனை அவராக்கம்.

—ஆசிரியர்]

ஆறு

துயில்கின்ற மலையின் ஊற்றே!
துள்ளிடும் மறியே! காயும்
வெயிலுக்கு நெளியும் வெள்ளி
உருக்கே! பொன் மணலுக்குள்ளே
பயில்கின்றாய் ஆடல்! பாடல்!
பாறையில் தொத்தித் தொத்தி
மயில்விரி இறக்கைக் கண்போல்
வடிக்கின்றாய் குமிழி முத்தே!

நாகம்போல் நளினம் காட்டி
நகர்கின்ற நதியே, வெட்கம்
தேகத்தை மூடா வண்ணம்
திரிவதில் இல்லை என்றே
யூகித்தாய்! மரங்கள் பூவின்
ஆடையை அணிவித் தாலும்
வேகத்தால் விலக்கிச் செல்வாய்!
வெட்கந்தான் இறந்து போச்சோ?

யாருனை ஆறென் றார்கள்?
அழைத்ததை நினைத்துத் தானோ
பேரினுக் கேற்ப நீயும்
பெருந்தன்மை விளக்கிக் காட்டி
ஊரினுக் கூழி தொட்டு
உயிர்வாழ வழியுண் டாக்கி
ஏரினுக் குயிரே ஆகி
எம்பசி ஆற்று கின்றாய்!

எழுதியவர்: ராம அடைக்கலவன்

பால் நிலவில்

> இயற்கை எழில் அவர்களை இணைத்தது. இணைப்பு பயனும் அளிக்க விருந்தது. ஆனால் சுயம் வரம் கூட்டி மகளுக்கு மணாளனைத் தேட எண்ணினான் மன்னன். காதலர்களைப் பொறுத்தவரையில் திருமணம் நிகழ்ந்த ஒன்றாகவே, அவர்கள் அரண்மனையைவிட்டுப் பால் நிலவில் வெளியேறினர்!

என்றும்போல் சபையில் கூட்டம். உயர்ந்த பீடமொன்றில் ரத்தினங்களும் வைடூரியங்களும் வைத்திழைக்கப்பட்ட அரியணையில், இருபுறத்திலும் இரு நங்கைகள் வெண்சாமரம் வீச ஆனந்தமாய் வீற்றிருந்தான் ராஜேந்திரன்.

வாத்தியங்கள் இன்னிசை முழங்க, ''கலீர் கலீர்'' எனச் சதங்கைகள் ஒலிக்க அவையின் நடுவில், விசித்திரமான வர்ணங்கள் தீட்டப்பெற்ற உயர்ந்த ரத்னக் கம்பளத்தின் மேல் பம்பரம் போல் சுழன்று நடனமாடிக் கொண்டிருந்தாள் அரண்மனை நாட்டிய ராணி. சபை, நாட்டியத்திலும் அவள் பேரழகிலும் ஈடுபட்டுத் தன்னையே மறந்திருந்தது. இன்னிசையின் நாதமும், சதங்கை ஒலியும், அவள் அங்கங்களின் அசைவும் அவர்களை 'விர்' என வானத்திற்குத் தூக்கிச் சென்றன. எதிர்த்து வரும் காற்றைக் கிழித்துக்கொண்டு விண்ணில் பறந்தனர். சிலர் மலையின் சிகரத்தை வெகு வேகமாக அடைந்து கொண்டிருந்தனர். பொதுவாக 'அவையிலிருக்கிறோம்' என்ற நினைவே அவர்களுக்கு இல்லை.

அரசன் கலைக்கண்களோடு நடனத்தைச் சுவைத்துக் கொண்டிருந்தான். ''கவிவாணர்களின் அழகின் கற்பனை இவள்'' என வியந்து கொண்டிருந்தான் அமைச்சன். பேரழகும் பெருங்கலைத் தேர்ச்சியும் கொண்டுள்ள இவளைச் சோழ நாடு பெற்றிருப்பது குறித்துப் பெருமையால் உள்ளம் பூரித்துக் கொண்டிருந்தான் சேனாபதி.

பற்பல வாத்தியங்களின் இன்னிசை, கலீர் கலீர் எனச் சதங்கைகளின் கொஞ்சும் ஒலி-ஊடே-நிர்மலமான வானத்தில் திடீரெனப் பளிச்சிடும் மின்னல் போல் - 'டணர் டணர்' என மணியின் ஓசை, இன்னிசை அடங்கிற்று. நடனம் நின்றது. பளிச்சென மறைந்தாள் நாட்டிய ராணி.

அரசன் தன் நினைவிற்கு வந்தான்.

அமைச்சன் பரபரப்படைந்தான்.

சேனுபதி விஷயத்தை அறியத் துடிதுடித்தான்.

விண்ணில் பறந்தவர்கள் அம்புபட்ட பறவைபோல் தலைகிழாய்ப் பூமியில் வந்து விழுந்தனர். மலையுச்சியிலிருந்தவர்கள் உருண்டு உருண்டு மலை அடிவாரத்தை அடைந்தனர்.

நிசப்தமாயிருந்த அவையில் சற்று கலகலப்பு. சபையினுள் நுழைந்தான் வாயிற்காப்போன். எல்லாக் கண்களும் ஏககாலத்தில் அவனை நோக்கித் திரும்பின. "தக்காணத்திலிருந்து ஒரு வீரன் சமூகத்திற்கு வரக் காத்துக்கொண்டிருக்கிறுன்" என அடிபணிந்து உரைத்தான் காவலன். "அவைக்கு வரட்டும்" என உத்திரவு பிறந்தது அரசனிடமிருந்து.

ஓலைச்சுருள் அடங்கின பொன் மூடியுடன் அவையினுள் நுழைந்தான் அந்த வீரன். சபையில் அமைதி. ஓலையைப் பிரித்துப் பார்த்தான் மன்னன். கண்கள் ஒளி வீச அவன் அதரங்கள் புன்னகை பூத்தன. சபையின் மௌனத்தைக் கிறிக்கொண்டு கிளம்பியது மன்னனின் குரல்.

"ஆதித்தரே"

சேனுபதி எழுந்து நின்ருர்.

அரசனின் கணிரென்ற குரல் தொடர்ந்து ஒலித்தது: "உமது மகன், அல்ல, சோழநாடு பெற்றெடுத்த வீரப் புதல்வன், இளம் செம்மல், நெடுந்திரையன் இரண்டாம் புலிகேசியைத் தக்காணத்திலிருந்து விரட்டி, சோழநாட்டு வெற்றிக் கொடியை அங்கு பறக்க விட்டிருக்கிறுன். அந் நற்செய்தியையே கொண்டுவந்திருக்கிறது இவ்வோலை" எனக் கூறி நிறுத்திஞன் மன்னன்.

பெற்றெடுத்த காலத்தைவிட மட்டற்ற மகிழ்வுடன் ஆசனத்தில் அமர்ந்தார், வயது சென்ற சேனுபதி ஆதித்தர். மங்கலமான செய்தி கொண்டு வந்த வீரனுக்குத் தகுந்த பரிசுகளைக் கொடுக்க உத்தரவளித்துச் சபையைக் கலைத்தான் மன்னன். அன்று உறையூரில் வெற்றி விழாக் கொண்டாட்டத்தின் ஒலி வானை முட்டியது.

2

நெடுந்திரையனுக்கு அன்று அரண்மனையில் விருந்து. மன்னனின் ஒரே மகள், தாயிழந்த மகள், பூந்திரைக்கு ஒரே உற்சாகம். அவள் இதயத்து உல்லாச உணர்ச்சிகள் அலைப்பெருக்கெடுத்து ஓடின. மையிட்டுக் கருகருவென விருந்த புருவங்களின் அடியிலே உள்ள கண்கள் அதிசய மீன்களைப் போல் முகவெளியில் துள்ளி விளையாடின. இவ்வளவு களிப்பு ஏன்? நெடுந்திரையன் வருகைக்காகவா? அவள் நெடுந்திரையனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறுளே ஒழிய அவனைப் பார்த்ததில்லையே! ஏதோ என்றும் இல்லாத மகிழ்ச்சியால் அவள் உள்ளம் நிரம்பியிருந்தது. சாளரத்தின் வழியே குளிர்ந்த காற்று

பூங்காவனத்திலுள்ளபூக்களின் மணத்துடன் கலந்து விசிற்று. விருந்து அறையில் அலர்ந்த ரோஜாவுடன் ஊதுபத்திகளின் நறுமணமும் கலந்து பரவியது.

அரசன், நெடுந்திரையன், இன்னும் அரசாங்க அலுவல்க ளில் உயர்ந்த பதவிகள் வகிப் பவர்கள் விருந்தறையில் நுழைந்தனர். அரசனுக்கு அருகே இடப்பட்டிருந்தது பூந் திரைக்கு ஆசனம். சரிகை கலந்த பச்சைப் பட்டாடை யணிந்து திரை மறைவிலிருந்து ஒய்யாரமாக நடந்து வந்தாள் மெல்லியலாள் பூந்திரை. நடைக்கு இசையக் காலிலணிந் திருந்த சதங்கை 'கலிர் கலிர்' எனக்கொஞ்சி விளையாடியது. விருந்து நடந்து கொண்டிருந் தது.

தங்கத்தை உருக்கிவிட்டாற் போன்று தகதகவென மின் னிய மேனி, சாந்தி ஒளி விசும் கண்கள், பரந்த நெற்றி, எடுப் பான மூக்கு, சுருள் சுருளான தோள்வரை வெட்டப்பட்ட சிகை, மார்பகத்தில் சரிகைப் பட்டாடை, அடர்ந்து வளர்ந்த புருவங்கள் — இவ்வுருவத்தின் மேல் வேல் போன்ற தன் விழி களைச் செலுத்திச் செலுத்தி எடுத்தாள் பூந்திரை. தக்கா ணத்தில் சோழர் கொடியைப் பறக்கவிட்ட வீரன் நெடுந்திரை யனிடம் தன் உள்ளத்தைப்பறி கொடுத்து விட்டாள். அறு சுவை உண்டியோடு தன் உள் ளத்தையும் அவனுக்கு விருந் தாக்கினாள்.

கன்னிப் பருவம், அமைதி யற்று அங்கும் இங்கும் பிறழும் கயல் போன்ற கண்கள், செக் கர் வானம் போன்ற சிவந்த மேனி, எழில் வீசும் முகவொளி, நிழல் நிறக் கூந்தல், வானத் தின் மத்தியில் தோன்றும் திங் கள் போல் நெற்றியின் மத்தி யிலே திலகம், சற்றைக்கொரு தரம் சுருங்கி விரியும் வில் போன்ற புருவங்கள் - பூந்திரை யாள். இவ் அழகியின் பேரொளியில் உள்ளத்தை ஓட விட்டான் நெடுந்திரையன்.

விருந்தின் முடிவிலே மாதுளை யின் சிவப்பை ஒத்த இதழ்கள் சற்றே பிரிந்து நின்று முத்துப் போன்ற பற்கள் தெரியும்படி அவனைப்பார்த்து இளநகை பூத்தாள் மங்கை நல்லாள் பூந் திரையாள். வைரம்போன்று ஒளி வீசும் புன்னகை யொன்றை வாரி வீசினான் நெடுந்திரையன் பதிலுக்கு. அவர்கள் காதலின் சின்னமாக அப்புன்னகை பூத்தது.

3

அமைதியான இரவு. அரண் மனை அந்தப்புரப் பூங்கா வனத்தில் குளுமையான தென் றல் வீசிக்கொண்டிருந்தது. வானத்தில் தேன் பொழியும் பால் நிலவு. அதைச் சுற்றி லும் தூவிவிட்ட மல்லிகை போல் கண்சிமிட்டும் தாரகை கள். பூங்காவனத்தில் கட்டப் பட்ட செயற்கை ஊற்றிலிருந்து நீர் கிளம்பிச் சிறுசிறு திவலைக ளாகச்சிதறிக்கொண்டிருந்தது. அதனருகே ஒரு மகிழ மரம். அதற்குச் சற்றுத் தள்ளிக் குண்டு மல்லிகைகள் பூத்திருந் தன. தூரத்தில் வானை முட் டிக் கொண்டிருக்கும் மலைச் சிக ரங்கள். முழு எழிலுடன் விளங்

கிய அப்பூஞ்சோலையில் — இயற்கை அன்னையின் மடியில் காதலரிருவர் தவழ்ந்து கொண்டிருந்தனர். நெடுந் திரையனின் பருத்து உயர்ந்த தோள்களில் இழைந்துகொண் டிருந்தாள் அரசனின் புதல்வி பூந்திரை. இன்பப் போதை யில் திளைத்துக்கொண்டிருந்த னர் அவர்கள். பூந்திரையின் செவ்விதழ்களின் தேனைச் சுவைத்துக் கொண்டிருந்தான் நெடுந்திரையன். கரு முகில்க ளின் மத்தியில் விளங்கும் குளிர் நிலவைப்போல், அவன் கேசத் தின் மத்தியில் நின்று சிரித் துக் கொண்டிருந்தன மலர்ந்த மல்லிகைப் பூக்கள். காற்றில் கலந்து வீசிய அந்நறுமணம் அவனை இன்னும் போதைக் குள் அமிழ்த்திற்று. பரந்த மார்பின் அணைப்பில் மெய் மறந்திருந்தாள் பூந்திரை.

அவள் அரசனின் ஒரே புதல்வி. அவன் அரசன் கீழ்ச் சேவகம் புரியும் சேனபதியின் மகன். அவள் ராஜேந்திரனுக் குப் பின் சோழநாட்டுப் பட்டத் தரசி. அவன் தன் தந்தைக் குப் பின் அவளிடம் ஊழியம் செய்ய வேண்டியவன்—இதெல் லாம் அவர்களின் காதல் உல கத்திற்கு-இன்ப உலகத்திற்கு அப்பாற்பட்ட செய்திகள். "அதோ, வானத்தில் வட்ட மிடும் வெண்ணிலவைப் பாருங்கள்" என இனிமை யாகச் சொன்னாள் அவள். "அதைச் சுற்றிலும் நம் ரகசி யக் காதலை ரகசியமாகக் கண் சிமிட்டிப் பேசிக்கொள்ளும் தாரகைகள்" என்றான் அவன், கனவில் பேசுவது போல்.

இன்ப மயக்கத்திலிருந்த அவர்களால் அதற்கு மேல் பேச முடியவில்லை. வானத்தில் வெண்மதி ஓடிக்கொண்டிருந் தது. மலர்களின் மணத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்தது தென்றல்.

4

நாட்கள் சில சென்றன. மக னின் ஒவ்வொரு செயலும் வேறுபட்டுக்கொண்டு வருவதை உணர்ந்தான் வயது முதிர்ந்த சேனு பதி ஆதித்தன். தனிமையை யும் அமைதியையும் விரும்பி னான் நெடுந்திரையன். சிந்தனை யிலேயே மூழ்கியிருந்தான் அவன். முன்போல் கலகலப் பாக எவருடனும் பேசுவதில்லை. மகனின் இந்த வேறுபட்ட தன் மையைக் கண்ட ஆதித்தனின் மனம் விசனத்திற்குள்ளாகி யது. நெடுந்திரையன் செய்கை களின் பிரதிபலிப்புத்தான் அரண்மனை அந்தப்புரத்திலும்!

இளவரசி நன்ருக உண்ப தில்லை, உடுப்பதில்லை. கல கலப்பான பேச்சும், உற்சாக மான சிரிப்பின் ஒலியும் அந்தப் புரத்தை விட்டு ஓடிச் சில நாட் களாகி விட்டன. வானத்தை யும், மரங்களையும் பூக்களையும், பறவைகளையும் பார்த்துப் பூந் திரை அவளாகவே பேசிக் கொள்வாள். தூக்கத்திலும் வாய் பிதற்றல். ஏதேதோ கனவுகள் கண்டு விழித்துக் கொள்வாள். இளவரசியின் இச்செயல்களைத் தாதிகளின் மூலமும், நேரிலும் கண்டறிந் தான் ராஜேந்திரன்.

இது விஷயமாக அமைச் சனைக் கலந்தான் அரசன். அமைச்சன் அமைச்சனல் லவா? விஷயத்தை உணர்ந்து

கொண்டான். 'இளமையின் ரத்தம், காம்புகளின் துடிதுடிப்பு, இயற்கையின் உணர்ச்சிப் பெருக்கு—ஏதோ ஒன்றை வேண்டுகிறது'—இதைத் தெரிந்து கொண்டான் அமைச்சன். "இளவரசியின் சுயம்வரத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது தான்" என ஒரே வரியில் யோசனை சொன்னான் அவன்.

சுயம்வரத்திற்கு ஏற்பாடுகள் அரண்மனையில் நடந்து கொண்டிருந்தன. அரசன் இதுபற்றிப் பூந்திரையிடம் சம்மதம் கேட்கவில்லை. அவன் தான் அவளைக் கேட்காமலேயே அமைச்சன் மூலம் அவளுக்கு என்ன வேண்டுமென்பதைத் தெரிந்துகொண்டு விட்டானே!

சுயம்வர ஏற்பாடுகளைக் கண்ட பூந்திரையின் உள்ளமும் உடலும் ஒருங்கே நடுங்கின. கண்கள் தாரை வார்த்தன. அவள் மன அமைதிக்காக அரசன் செய்த ஏற்பாடுகள் அவள் மன அமைதியைப் பெரிதும் குலைத்தன.

இச்செய்தியை அறிந்த நெடுந்திரையன் இடி ஒலி கேட்ட நாகம் போல் நடுங்கினான். பயத்திற்கும் காதலுக்குமிடையே அவன் உள்ளம் ஊசலாடிக் கொண்டிருந்தது. புலிகேசியைப்புறங்காட்டி ஓடச் செய்த அவன் அஞ்சினான்!

ஆம். இருவரும்—நெடுந்திரையனும் பூந்திரையும்—பயப்படக்கூடிய அளவிற்கு விஷயம் நடந்து விட்டது.

இயற்கை அவர்களை இணைத்திருந்தது. இருட்டென்னும் திரைக்குப் பின்னே அவர்கள் இன்பங்கண்டு வந்தனர். பல நாள் தொடர்ந்து சந்தித்தனர். முடிவில், இயற்கை இணைப்பின் பயனாய் அவள் வயிற்றிலே—.

இதை நினைத்த மாத்திரத்தில் நெடுந்திரையன் உள்ளம் காதலுக்கும் கடமைக்கும் இடையே சுற்றிச் சுற்றி வந்தது. பூந்திரையின் உள்ளத்தில் பயங்கரமான புயல் ஓயாது சுழன்று வீசியது. இச்செய்தியைத் தந்தையினிடம் எப்படிச் சொல்வது?

சுயம்வரத்திற்கு நாட்கள் நெருங்கிக்கொண்டிருந்தன.

5

நடுநிசி. பொழுது புலர்ந்தால் சுயம்வரம். இருவரும் பூங்காவனத்தில் சந்தித்தனர்-இளம் காதலர்கள்-ஒரு குழந்தைக்குத் தாயும் தந்தையுமாகப் போகிறவர்கள். உறுதியான முடிவின் சாயை அவன்முகத்தில் படிந்திருந்தது. ஆனால் அவள் ஒன்றும் புரியாது திகைத்து நின்றாள். அவன் அவள் காதோடு காதாக ஏதோ சொன்னான். சரி என்பதற்கடையாளமாக அவள் தலையை அசைத்தாள். மறுகணம். அவன் முன்னோக்கி நடந்தான். அவள் அவனைப்பின் தொடர்ந்தாள். பூங்காவனம்—ராஜவீதி—நகரத்தையே கடந்துவிட்டனர். அவன் நடந்து கொண்டேயிருந்தான். அவளும் அவனைப் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தாள். பால்நிலவில்அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

அரண்மனையில், தன் அருமை மகளின் சுயம்வரத்தை எண்ணி மன அமைதியுடன் மஞ்சத்தில் அயர்ந்திருந்தான் ராஜேந்திரன். வானத்தின் மத்தியை நோக்கி ஏறிக்கொண்டிருந்தது நிலவு.

'தரும யுத்தம்' 'அறப்போர்' என்ற சொற்கள் கவர்ச்சிமிக்கவைதாம்; 'முன் வைத்த காலைப்பின் வைப்பது போர் வீரனுக்கு அழகல்ல' என்று தான் எல்லோரும் கூறுவார்கள். ஆனால் நடைமுறையில் 'தரும யுத்தம்' நடத்துபவன் தோல்வி தான் அடையவேண்டியிருக்கிறது; போர்க்களத்தில் பின் வாங்குவது என்பது நீக்கமுடியாத நிகழ்ச்சியாகி விட்டது. ஏன் இந்த முரண்பாடு என்பதனை விளக்குகிறார் கட்டுரையாளர்.

அறப்போர்

தென்னுப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை

"முன்வைத்த காலைப் பின் வைப்பது" வீரனுக்கழகல்லவென்று சாதாரணமாக எல்லோரும் சொல்வதுண்டு. யுத்தத்தில் முன்வைத்த காலைப் பின்வைக்கக்கூடாதென்பது நல்ல கொள்கை தான். தவறுதலான அர்த்தம் கொடுப்பதுதான் அசட்டுத்தனம்; காலைப் பின் வைப்பதில் தவறு ஒன்றுமில்லை; முன் வைத்த மனத்தைத்தான் பின் வாங்கலாகாது.

சுமார் 3000 ஆண்டுகட்கு முன் இது சரியாக இருந்திருக்கலாம். ஏனென்றால் அந்தக் காலத்து யுத்தங்கள் இங்கேயே இருந்து வந்த அரசர்களிடையே ஏற்படும் பந்தயங்கள், தனிப்பட்ட மல்லர்கள், வில்லர்களின் சோதனைகள். இவ்வரசர்களிடையே ஏற்படும் வெற்றி அல்லது தோல்வி அவர்களுடைய குடிகளைப் பாதிப்பதல்ல. "இதற்கு முன் ஒரு தேசத்துக்கு ராஜாவாக இருந்தான். யுத்தத்தில் வென்றால் இரண்டு தேசத்தில் கொடி பறக்கிறது" என்ற பெருமையைத் தவிர வேறெவ்வித லாபமும் இல்லை. ஒரு வேளை ஏதாவது ஒரு ராஜாவின் பெண்ணுக்குச் சுயம்வரம் நடந்தால் இந்த ராஜாவைப் பற்றிப் புகழ் பாடுவதற்கும் உபகாரமாக இருக்கும். இவர் நடத்திய யுத்தங்களையும் சம்பாதித்த வெட்டுக் காயத்தின் ஜாபிதாவையும் கேட்டுச் சூதுவாதில்லாத இளம் பெண்கள் இவர்களுக்கு மாலையிடலாம். இதைத் தவிர வேறொரு அர்த்தமும் கிடையாது, அந்தக் காலத்து யுத்தங்களுக்கும் வெற்றிக்கும். ஆகையால் தர்ம யுத்தம் நடப்பதில் குடிஜனங்களுக்கு நஷ்டமில்லை. ஆனால் நம் நாட்டில் அன்னியர்கள் காலடி எடுத்து வைக்க ஆரம்பித்த பிறகு, அதிலும் மகமதியப் படையெடுப்புக்குப் பிறகு இந்த தர்ம யுத்தத்துக்கு அர்த்தமே கிடையாது.

17-ம் நூற்றாண்டுவரை நம் நாட்டில் புகுந்த அன்னியர்கள்

தமது வெற்றிக்குப் பிறகு அன்னிய நாட்டாராக இருக்கவில்லை. காபூல் பிரதேசத்துக் கப்பால் அவர்களுக்கு உறவினர் இருப்பதாகக்கருதவில்லை. இந்த நாட்டில் அவர்கள் சம்பாதித்த வெற்றியை மற்ற நாட்டாருக்குப் பயன்படுத்தவில்லை. அவர்களும் இந்தியராய் விட்டார்கள்.

ஃ ஃ ஃ

அது மட்டுமல்ல. அவர்கள் விருந்தோம்பல் என்ற தர்மத்தையும் அளவு கடந்து கையாண்டனர். தம்மை வந்து யாசித்தவர்களுக்கும் அடைக்கலம் புகுந்தவர்களுக்கும்—தனி மனிதருக்கல்ல, அன்னிய நாட்டுக்கு, பேராசையின் தூண்டுதலால் "திரைகடலோடி" வந்த நாடோடிக் கூட்டங்களுக்குத் தாராளமாக இடங்கொடுத்தனர். பின்னல் அவர்கள் வெறும் தனி மனிதர்களல்லவென்பதும், இவர்களிடையே மிகுந்த கட்டுப்பாடும் பின்பலமும் இருப்பதும் தெரிந்தபிறகு கூட "விருந்தோம்பலை"க் கைவிடவில்லை. விருந்தோம்பல் மாற்றானுக் கிடங்கொடுப்பதாக மாறியது. இவ்வாறு மகமதிய இந்தியர்களும் "முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை" "தர்ம யுத்தம" என்ற தர்மங்களைக் கடைப்பிடித்துத்தான் நாட்டின் சுதந்தரத்தை இழந்தனர் எனலாம்.

கண் திறக்குமா?

எதிர்பாராத அசந்தர்ப்பங்களால் இத் தொடர்கதை இந்த இதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

—ஆசிரியர்

"ஆகையால்இந்த இரண்டும் வெறும் அசட்டுத்தனம்" என்று நான் சொல்லவில்லை ஆனல் நம் தேசத்தின் சரித்திரத்தைப் படித்த ஒருவனுக்கு இந்த இரண்டு வார்த்தையையும் கேட்டால் வயிற்றெரிச்சல் தான் வரும்.

"தர்ம யுத்தம்" என்பதின் உண்மையான கருத்தை உணர்ந்துகொண்டால் அதில் எவ்விதக் குறையு மிருக்காது. யுத்தத்திலும் சரி, பந்தயத்திலும் சரி, இரண்டு கட்சிகளும் ஏதாவது சில யுத்த நிபந்தனைகளைப் பூர்வாங்கமாக ஒப்புக்கொண்டால் அதைக் காப்பாற்றுவதுதான் நியாயம்; புத்திசாலித்தனமும் அதுதான். அதுதான் தர்ம யுத்தம். முதலில் ஒப்புக்கொண்ட நிபந்தனையை நாம் மீறி அதன் காரணமாகத் திடீரென்று வெற்றி பெற்றுவிட்டால் அடுத்த நிமிஷத்திலேயே நமது எதிரி நம்மைத் தாக்கி வென்றுவிட முடியும். நம் எதிரி முதலில் நிபந்தனைகளை உடைத்து விட்டால் அதன் பிறகு நாம் அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்பது அவசியமில்லை. நாமும் அந்த நிபந்தனைகளை உடைத்து விடுவது அநியாயமல்ல. இதை அறிந்து 'தர்ம யுத்தம்' செய்தால் நஷ்டமில்லை.

முன்வைத்த கால் விஷயத்தில் சொல்லியதே இதற்கும் பொருந்தும். எதிரி எப்படி நடந்தாலும் சரி, நாம் முதலில் கூறிய ஒப்பந்தப்படியே நடக்க வேண்டுமென்று இருப்பது தோல்விக்குச் சுருக்கு வழி.

"மோக்ஷத்துக்குச் சுருக்குவழி" யென்று ஏதாவது சனாதன க்ஷத்திரியன் கூறலாம்; அப்படியானால் கழுத்தில் சுருக்குப் போட்டுக்கொள்வது அதை விடச் சுருக்கு வழி!

மூன் ஒப்பந்தம் ஒன்றும் இல்லாவிட்டால் அவ்வப்போது வெற்றிக்கு வேண்டிய எந்தக் காரியத்தைச்செய்தாலும் அது தர்மத்துக்கு விரோதமல்ல.

சிலசமயத்தில் வெற்றிக்காக முன்வைத்த காலைப் பின்வைக்க வேண்டியிருக்கும். மனச்சோர்வினால் அல்ல; கைகால்களின் சோர்வினால், லட்சியத்தின் வித்தியாசத்தினால் அல்ல; வில்லின் குறியாக இருக்கும் பொருள் இடம் விட்டுப் பெயர்வதால். கஷ்டத்துக்கு பயந்தல்ல. தோல்வியை வெறுத்து. இந்த ரகசியத்தைத் அறியாதவன்யுத்தத்தில்இறங்காமல் இருப்பதுதான நலம்.

1914—18ல் பிரான்சு பிரிட்டன் முதலிய "நேசதேச"ங்களுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடந்தபோது தினசரிப் பத்திரிகைகளில் அடிக்கடி அதைப்பற்றிச் செய்திகள் வெளியாகும். "இன்று நமது துருப்புகளில் 235 பேர் இறந்தனர். 1000 பேர் காய மடைந்தனர். இருந்தாலும் நம் துருப்புகள் சுமார் 5 மைல் தூரம் மிகவும் சாமர்த்தியமாகவும் ஒழுங்காகவும் வேகமாய்ப் பின்வாங்கினார்கள். எதிரிகளால் இந்த ஓட்டத்தைப் பிடிக்க முடியவில்லை." இம்மாதிரிச் செய்தியைப் படித்தவுடன் நேசதேசப் படையைப்பற்றிச் சிலர் பரிகாசமாகச் சிரிப்பார்கள். நம்மவர்

திருமணம்

ஜெயங்கொண்டம் திருமிகு வை. இராசகோபாலன் — கோகிலாம்பாள் க இராமநாதன் - சரசுவதி ஆகியோர் வாழ்க்கைஒப்பந்தம் சேலம் தோழர் சித்தையன் அவர்கள் முன்னிலையில் 23-6-48 அன்று மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

கள் யுத்தத்தின் ரகசியத்தை அறியாததுதான் இந்தப் பரிகாசத்துக்குக் காரணம்.

சிதறுண்டு போகாமல் படையைப் பின்வாங்குவதும், பின்வாங்கும்போது நமக்கு வசதியான இடம் வந்தவுடன், நம்மைத் துரத்தும் எதிரியை எதிர்பாராமல் தாக்குவதும் தான் தற்காலம் யுத்தத்தின் ரகசியம்.

∴ ∴ ∴

யுத்தமாயினும் சரி, போராட்டமானாலும் சரி, வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் தடுக்கும் இடையூறுகளை நீக்கும் முயற்சியானாலும் சரி இந்த முயற்சி தான் வெற்றியளிக்க முடியும்.

குருட்டுத்தனமாகத் "தர்ம யுத்தம்" "புறமுதுகு காட்டாமை" யென்று சொல்வது அர்த்தமற்ற பேச்சு. நம் கை சோர்ந்துபோய் எதிரியிடம் நம்மைவிட அதிக பலமிருக்குமானால், எதிரி "தர்ம யுத்தத்தில்" நம்பிக்கை யில்லாமல் பாணத்தைத் தொடுத்துக் கொண்டே இருந்தால், அவனுடைய பாணத்துக்கு நெஞ்சைக் காட்டுவதில் அர்த்தமில்லை. முதுகில் காயம் பட்டால், பிறகு என்றாவது ஒரு நாள் மறுபடி எதிரியை எதிர்க்க முடியும். நெஞ்சில் காயம் பட்

டால் மரணம் ஏற்படும். ஆகையால் இந்தமாதிரிச் சந்தர்ப்பத்தில் முதுகைத்தான் காட்ட வேண்டும்.

இதுதான் வெற்றியின் ரகசியம். அந்த யுத்தம் வெறும் தடிக்கம்பு யுத்தமாயிருந்தாலும் சரி, வில் யுத்தமானாலும் சரி, துப்பாக்கி யுத்தமானாலும் சரி, கத்தியும் ரத்தமுமில்லாத அஹிம்சை யுத்தமானாலும் சரி அரசியல் முறையை மாற்றும் யுத்தமானாலும் சரி, பொருளாதார அமைப்பை எதிர்க்கும் முயற்சியானாலும் சரி, அல்லது சமூக ஆசாரங்களைப் பற்றிய கிளர்ச்சியானாலும் சரி.

ஃ ஃ ஃ

இது வெறும் பேச்சல்ல. வெற்றி தோல்வி இரண்டிலும் அனுபவம் பெற்றவர்களுடைய கருத்தையே நான் சொல்கிறேன்.

ஜாரின் எதேச்சாதிகாரத்திலிருந்து விடுதலை பெறவும், பொதுவுடமை சர்க்காரை ஏற்படுத்தவும் தமது வாழ்நாளைச் செலவழிக்கும், செலவழித்த, ஸ்டாலின், லெனின் இவர்களின் அபிப்ராயத்தைப் பார்ப்போம்.

“1903–1905ல் இயக்கம் முன்னேறிக்கொண்டிருந்தது. எதிரியைத் “தாக்குவதே” போரின் உருவமாக இருந்தது. அரசியல் காரியங்களுக்காக வேலை நிறுத்தங்கள்; அரசியல் ஊர்வலங்கள்; சட்டசபை பகிஷ்காரம்; எதிர்ப்புகள்; புரட்சி கலோகங்கள்; இவையெல்லாம் அந்தப் போராட்டத்தின் உருவங்களாக இருந்தன. இவற்றை நடத்தும் ஸ்தாபனங்களும் சங்கங்களின் அமைப்பும் அதற்குத் தக்கவாறு இருந்தன. தொழிற்சாலைக் கமிட்டிகள், சோவியத் தொழிலாளர் கமிட்டிகள், சோவியத் குடியானவர் கமிட்டிகள், இவையெல்லாம் தமது கிளர்ச்சியை ஏறக்குறைய பகிரங்கமாகவே செய்துவந்தன. இதுதான் அந்த சமயத்தில் இருந்த சங்க அமைப்பு.

“ஆனால் 1907–1912ல் புரட்சி இயக்கம சற்று பலம் குறைந்து வரும காலமாக இருந்தது. ஆகவே வேலைத் திட்டத்திலும் மாறுதல் செய்யப்பட்டது. சட்டசபை பகிஷ்காரத்துக்குப் பதிலாகச் சட்ட சபைப் பிரவேசம்; நேரடியான எதிர்ப்புக்குப் பதிலாகச் சட்ட பூர்வமான எதிர்ப்பு; ராஜிய காரணத்துக்காக வேலை நிறுத்தம் முதலியன நடத்துவதை விட்டு அவ்வப்போது தொழிலாளர்களது சில்லரை உரிமைகளுக்காகநடத்தப்படும் வேலை நிறுத்தங்களை நடத்துவதும் சில சமயத்தில் ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதும் கூட ஓர் “வேலைத் திட்டமாகவே” இருக்கும். இவற்றை நடத்துவதற்குத் தக்கபடி ஸ்தாபனங்களும் மாற்றப்பட்டன, புரட்சிக்கான பெருந்திரள்களைச் சேகரிப்பதற்குப் பதிலாக, கல்வியறிவை வளர்க்கும் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், இன்னும் “சட்ட பூர்வமான” பல ஸ்தாபனங்கள்.

“புரட்சிக் கட்சிகள் ஒவ்வொரு நாளும் தமது அனுபவத்தால் புதிய புதிய பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். எப்படி எதிர்ப்பது, எதிரியை எப்படித் தாக்குவது

என்பதை அவர்கள் கற்றுக் கொண்டு விட்டார்கள். ஆனால் அது மட்டும் தெரிந்தால் போதாது. எப்படிப் பின் வாங்குவது "முன் வைத்த காலைப் பின் வைப்பது" "புற முதுகு காட்டுவது"! என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். முன்னேறி எதிரியைத் தாக்குவது; சைனியம் சிதறுண்டு போகாமல் பாதுகாத்து, சரியான இடத்தையும் சந்தர்ப்பத்தையும் நாடிப் பின்வாங்குவது; இரண்டையும் தெரிந்து கொண்ட ஓர் தலைவன் தான், சைனியத்துக்கு வெற்றியைச் சம்பாதித்துக் கொடுக்க முடியும்" என்று லெனின் சொல்கிறார்.

∴ ∴ ∴

பொது ஜன இயக்கங்களில் இம்மாதிரிப் போர் முறையை மாற்றுவதற்காகப் பின்வாங்கும்போது சிலர் இவர்களை மிதவாதிகள் என்றும் சில்லரை நன்மைகளில் திருப்தியடைபவர்களென்றும், லட்சியத்தில் சமரசம் செய்துகொண்டவர்களென்றும் நினைப்பார்கள். அது தவறு. சிற்சில சமயங்களில் எதிரியின் பலத்தை அல்லது சந்தர்ப்பங்களின் பலத்தை அறிந்து ஒப்புக்கொண்டு ராஜி செய்து கொள்ளும் புரட்சிக்காரனுக்கும் சீர்திருத்தக்காரனுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு.

அது மனப்பான்மையைப் பற்றியதாகும். புரட்சிக்காரனுக்குப் புரட்சியில் தான் கண். அவன் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்வது சீர்திருத்தத்திலுள்ள ஆசையால் அல்ல. அதை ஓர் இடைக்கால மகசூலாக அவன் கருதுவான். தன லட்சியத்தை எட்டிப் பிடிப்பதற்கோர் உதை கல்லாகக் கருதுவான்.

∴ ∴ ∴

சில சமயங்களில் நமக்கு இடையூறாக நிற்பவர்களுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு சமரசமான முறைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாய் விடும். அவ்வாறு செய்வது லட்சியத்தை அடைவதில் உதவியாகவும் இருக்கும். ஒரே நல்ல உதாரணத்தின் மூலம் இதை லெனின் விளக்கியிருக்கிறார். ஒரு மலையின் உச்சியில் ஏற விரும்புகிறவன் எப்பொழுதும் மேட்டில்தான் ஏறிக் கொண்டிருக்கவேண்டுமென்று நினைப்பது தவறாகும். சில சமயங்களில் மேட்டில் ஏறுவதை விடுத்துப் பக்கச் சார்வுகளில் இறங்கி ஒரு பெரும் குன்றைச் சுற்றிவர வேண்டியிருக்கும். சில சமயங்களில் போன தூரத்தில் ஒரு பாகம் திரும்பவும் இறங்கி வேறு பக்கமாகப் போகவேண்டியிருக்கும்.

ஆகையால் புரட்சிக்காரர்கள் சில சமயங்களில் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவும் சமரச ஒப்பந்தங்களுக்கு இணங்கவும் வேண்டியிருக்கும். ஆனால் இம்மாதிரி ஒப்பந்தங்கள் புரட்சிக்காரரின் முயற்சியால் ஏற்பட்டால் அது சீர்திருத்தக்காரர்களின் முயற்சியால் ஏற்படும் இதே சீர்திருத்தத்தை விட அதிகப் பயன் தருவதாக இருக்கும். ●



வளரும் இலக்கியம்

ஓடாதே ☆☆

ஒரு சிறு பையனின் பரிதாப
கரமான கதை. அவன் துன்
பத்தைத் தாங்கமுடியாமல் கட
லில் விழப் போகும்போது
'தமிழ்வாணன்' அண்ணா
தடுத்து விடுகிருர். அவன
அன்புக்குரிய தங்கச்சியும் ஓடி
வருகிருள். தம்பிகள் படிப்ப
தற்கு அருமையான கதை.
தம்பிகள் உள்ளத்தை அள்
ளிக்கொண்டோடும் சின்னச்
சின்னச் சொற்ருெடர்களில்
கதை எழுதப்பட்டிருக்கிறது.
விலை அணா 4. ஜில் ஜில் பதிப்
பகம், தி. நகர், சென்னை.

ாம்பாட்டி ☆☆

ஆசிரியர் நாகமுத்தையா
வின் மூன்று சிறு கதைகள்.
புதுமையான கட்டுக்கோப்பு
டன் கதைகள் அமைந்துள்
ளன. யாரும் நினைக்க முடியாத
படி கதைகளை ஆசிரியர்
முடிக்கிருர். இடை இடையே
கவிதைகளில் சில அடிகளை
யும் நுழைத்துத் தன் கருத்தை
வெளிப்படுத்துகிருர். பொழுது
போக்குக்குப் பயன்படும் புத்த
கம் இது. விலை அணா 2.
தமிழக நிலையம் சண்முகநாத
புரம், P. O.

டி சாமியாரை ☆☆

ளரையே ஏமாற்றிவந்தார்
ஒரு சாமியார். அவரிடம் கண்
ணனென்ற சிறு பையன்
ஏமாந்து சிக்கிக்கொண்டான்.

ஆனால், கூரிய அறிவுடைய கண்ணன் சாமியாரின் தந்திரங்களை எல்லாம் தெரிந்துகொண்டு அவரிடமிருந்து தப்பிச் சென்று போலிஸ்காரனிடம் கூறிவிடுகிருன். போலிசார் அந்தச் சாமியாரைப் பிடித்துச் செல்கின்றனர். இந்தக் கதையைச் சிறுவர்களுக்குத் தகுந்த முறையில் சி. ஆர். ராசம்மா எழுதியிருக்கிருர். விலை 3 அணா. 'பாப்பா பதிப்பகம்' நாகப்ப அய்யர் தெரு, சென்னை—5.

இனஉணர்ச்சிக் கவிதைகள் ☆☆

திராவிடர்க்குத் தன்மான உணர்வை வளர்க்கும் பொருட்டு எழுதிய உணர்ச்சிப் பாடல்கள். விருத்தங்களும் இசைப்பாடல்களும் அழகுற அமைத்து மகிழ்வுறச் செய்கிருர் தோழர் மணி-அரசு. ஒவ்வொரு பாடலிலும் உணர்ச்சி பீறிட்டுக் கொண்டு வெளிப்படுகிறது. நண்பரின் ஆசைப்படி திராவிடர் ஒவ்வொருவரும் இந்நூலை ஏற்றருள வேண்டும். விலை அணா 5 வெளியிட்டோர் P. R. குப்புச்சாமி, புதுப்பாளையம் — திருவண்ணாமலை (வழி)

யார் குற்றவாளி ☆☆

எளிய நடையில் யார் குற்றவாளி, நானே குற்றவாளி என்ற இரு கதைக் கவிதைகளையளித்துள்ளார் திரு மாவண்ணா தேவராசன். கண்டதும் காதல் என்ற கொள்கையிலே கருத்

தழிந்து செத்தொழிந்த ஒரு சிறுமியின் கதையை முதற் கவிதையில் உருக்கமாகக் கூறு கிருர். பின்வரும் கவிதையில் கண்டதும் காதல் கொண்டு பின்னுளில் துன்பமுற்ற இளை ஞனின் கதையை ஆத்திர பாவம் வெளிப்படக் கூறுகிருர். கவிதையில் நல்ல ஓட்டமிருக் கிறது. விலை நான்கணு. இலக் குமி நூல் பதிப்பகம் திருவத்தி புரம். (வ. ஆ.)

திராவிடக்கழக லட்சியம் ★★★

பெரியார் அவர்களின் இரண்டு சொற்பொழிவுகளின் தொகுப்பு இந்நூல். அந்நாள் தொட்டுப் பார்ப்பனர்கள் தமி ழுருக்கு இழைத்துவரும் தீங் கைப்பற்றி விளக்கமாகப் பேசி யிருக்கிருர் பெரியார். நம் இந் நாள் நிலைமைக்குக் காரணம், நாம் நம்மீது சுமத்தப்பட்ட பிறவி இழிவினை உணர்ந்து, அதை நீக்கிக்கொள்ள முற் படாதது தான் என்று தெளி வாக்குகிருர். பார்ப்பனர்களிட முள்ள வகுப்புவாத உணர்ச்சி, இன்றைய அரசியலில் மந்திரி சபைகளைக் கலைப்பதில் முயன்று வருவதை நேரிலே அறிந்தும், பெரியார் பன்முறை இடித்துக் கூறியும் அறியாமல், பெரியாரையும் திராவிடர் கழ கத்தையும் அடக்க முற்படும் ஆளவந்தாரைப் பற்றி என்ன நினைப்பதென்று தெரியவில்லை. பயன் மிக்க இப்புத்தகத்தின் விலை 4 அணு. குடியரசுப்பதிப் பகம், ஈரோடு.

மொழி - எழுத்து ★★★

மொழியைப் பற்றியும், எழுத் தைப்பற்றியும் பெரியார் பேசி யுள்ள கருத்தே இந்நூலாக வடிவம் பெற்றிருக்கிறது. — மொழி வேறுபாட்டிற்குக் கார ணம் அவ்வவ் விடங்களின் நிலையும் அதன் வெப்பதட்ப நிலையும் தான் என்றும், ஒரு பொருட்படப் பல சொற்கள் வழங்குமாறு போலவே திரா விடமொழிகள் அமைந்துள வென்னும் கருத்தும் சிந்தித் தறிந்துகொள்ள வேண்டியது. வடமொழிக்கலப்பால் தமிழர் அறிவு பாழானதும், ஆங்கில மொழி வரவினுல் பகுத்தறிவு தோன்றியதும் ஆகிய உண்மைகளையும் பெரி யார் எடுத்துக்காட்டுகிருர். 38 எழுத்துக்களில் தமிழ் மொழி யைச் சுருக்கும் அரிய கருத்தை யும் வெளிப்படுத்தி யிருக்கிருர். விலை 4 அணு. குடியரசுப் பதிப் பகம் ஈரோடு.

பலசரக்கு மூட்டை ★★★

குத்தலான நகைச் சுவை யுடன் விஷயங்களை வெளிப் படுத்தித் தினந்தோறும் 'விடு தலை' படிப்பாரைக் கவர்ந்து வந்த "குத்தூசி"யின் கைவண் ணத்தொகுபபே இந்நூல். பெரியாரே பார்த்துப் பொரு மைப்படும் அளவு நகைச்சுவை பட எழுதுவதில் கைவந்த எழுத்தாளர் "குத்தூசி"யின் திறமையைப்பற்றி நாமெழுதித் தெரிய வேண்டிய நிலையில்லை திராவிடம்! 160பக்கம். எட்டணு. 'விடுதலை' நிலையம் சிந்தா திரிப்பேட்டை, சென்னை—2

தீ பரவட்டும் ★★★

நாட்டுக்குக் கேடு தரும் நாட கக் காப்பியமான இராமாயணம் எரிக்கப்பட வேண்டும் என்ற காலத்தில் பழம் புலவர்கள் சீறினர்! அவர்களுள்ளே கம்

பன் கவியமுதைப் பருகிப் பருகித் திளைத்த ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களுடனும் ஆராய்ச்சிப் புலவர் பேராசிரியர் சோமசுந்தர பாரதியாருடனும் நம் அண்ணா நிகழ்த்திய தர்க்கம் இந்நூல். பதில் கூறத் தெரியாத பாரதியாரும் சேதுப் பிள்ளையும் இராவணனையும் ஆரியர் பட்டியலில் சேர்த்தார்களே தவிரத் தம் கருத்தை வலியுறுத்த இயலவில்லை, நழுவினர். விலை ரூபாய் ஒன்று. ஞாயிறு நூற் பதிப்பகம், 28, அம்பலத்தாடும் மடத்தையர் வீதி, பாண்டிச்சேரி.

1858—1948 ★★★

1858-ல் பிறந்த வெள்ளைய ராட்சி 1948-ல் இல்லை. இந்த ஆண்டுகட்கிடையே தான் அடிமை இந்தியா ஒரே நாடாக இருந்தது. ஆனால் இன்று இரண்டாக இருக்கிறது உரிமைக்கறிகுறியாக. போதுமா? இங்கிலையில் திராவிடம் ஏன் தனி நாடாகக் கூடாது? என்று கேட்கிறார் அண்ணா. தடை கூறும் தேசியத் தோழர்கள் சற்று சிந்திக்கக் கூடாதா? விலை ரூ. 1. ஞாயிறு நூற் பதிப்பகம், பாண்டிச்சேரி

சிவாஜி (வேனில் மலர்) ★★

கதை, கவிதை, கட்டுரைகளுடனும் முகப்பில் பாரதியார் படத்துடனும் மலர்ந்துள்ள இம்மலர் அழகாக அமைந்துள்ளது. விலை ரூ. 1. ஆசிரியர் திருலோக சீதாராம், தெப்பக்குளம், திருச்சி.

மூர்த்திகள் உண்மை தெரியுமா? ★

தான் எதைப்பற்றி எழுத வந்தேனென்று கூறுது. அரசியல், பத்திரிகை, மொழி முதலிய ஒவ்வொரு துறைகளிலும் பெரியோராய்த் திகழும் மூவரை எடுத்துக்கொண்டு, அவர்களின் புகழையும் இகழ்வையும் கூறிச் கூறிச் செல்கிறார். தனித் தமிழ்ச் சொற்கள் எளியனவாய் இருந்தும், சொற்றொடர் நீண்டு போவதால் ஆசிரியரின் கருத்தையறிந்து கொள்வது கடிதாகின்றது. தலைவர்களை மதியாத தன்மையைத் தான், மக்களிடையே இந்நூல் பரப்பும் எனக் கருதுகின்றோம். ஆசிரியர்:-முருகப்ப அண்ணல் தங்கோ, விலை ரூ. 3—12—0. அஞ்சற் செலவு ரூ. 0—8—0. தமிழ் நிலம் நூல் மனை, 20, சஞ்சீவிப் பிள்ளை தெரு, வேலூர், வடாறுகாடு,

வரப்பெற்றோம்.

கிராம ஒளி: (மாத வெளியீடு) ஆசிரியர் நா. இராமசாமி, கிராம ஒளி, மாத்தூர் P. O. விலை அணா 2.

திருவிடம் (மாதமிருமுறை) விலை ரூ. 0-1-6. ஆசியர் சி. பி. தண்டாயுதபாணி. 23 B, மாதங்கிஸ்வரன் கோயில்தெரு, காஞ்சிபுரம்.


கேமந்தான்பட்டி, திருநாவுக்கரசு வித்யாசாலை: இருபத்திரண்டாவது ஆண்டு அறிக்கை இதழ், 1948.

தமிழ் மகமதியருக்குந் தனிப்பெரு விண்ணப்பம்: பண்டித எஸ், எஸ். ஆனந்தம் அவர்கள் 10, ராகவய்யா தெரு, தியாகராய நகர், சென்னை.

சலவைச்சுடர் (மாத வெளியீடு). விலை 3 அணா, ஆசிரியர் ராமரங்கன், சுதேசி நிலையம், குளித்தலை.

—நா. வேந்தரசன்

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM,
EAST MAIN STREET, PUDUKKOTTAI.



WRAPPER PRINTED AT THE SENTHAMIZH PATHIPPAKAM, PUDUKKOTTAI.